
பார்த்தாலே பரவசம்

ௐ

நினைத்தாலே நிம்மதி

எல்லாம் நல்லகாலம்தான்!

நாடி வந்தால் கோடி நலம்!!



# ப்ரம்மகுரு
# ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகளின்
# அரூப ரூப ஆராதனை

26 ஆம் ஆண்டு

# குருபூஜை வைபவ மலர்

11.10.2020 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீஸ்ரீஸ்ரீ பொன்முடி கோடீஸ்வரர் ராமநாத மஹாமடம், சாரிடபுள் & ரிலிஜியஸ் டிரஸ்ட்

சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில், திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு - 635 811.



# குரு கீதை

**ப்ரம்மானந்தம் பரம சுகதம்**
**கேவலம் ஞான மூர்தீம்**
**த்வந்வாதீதம் ககன சத்ருஷம்**
**தத்வமசியாதி லக்ஷயம்**
**ஏகம் நித்யம் விமலஅசலம்**
**சர்வதீ சா பூதம்**
**பாவாஅதீதம் திரிகுண ரஹிதம்**
**கோடிகுரும் தம் நமாமி**

ப்ரம்மானந்தம் - கிடைக்கரிய பேரானந்தம், பரம - முழுமையான, சுகதம் - சுகத்தை தரும், ஞான மூர்தீம்- ஞான உருவே, கேவலம் - களங்கமில்லாத, அனைத்திலும் தனித்திருக்கும், த்வந்த அதீதம் - இரண்டு (பிறப்பு-இறப்பு, சுகம்-துக்கம்) நியதிகளை கடந்த, ககன - வானம், சத்ருஷ - இணையான, தத்வம் அசி அதி லட்சியம் - நானே நான் தேடும் தெய்வீகம் என்கிற லட்சியம், ஏகம் - ஒன்று, நித்யம்- எப்போதும், விமல - பவித்ரமான, அசலம் - சலனமில்லாத, நிலையான, சர்வதீ - அனைத்திற்கும், சாக்ஷிபூதம் - சாட்சியாக இருக்கின்ற, பாவம் அதீத - உருவங்களைக் கடந்து, த்ரீ குண - மூன்று குணங்கள் (சத்வ, ரஜச, தாமச), ரஹிதம் - நீங்கிய, கோடி குரும் - கோடி குருவே, தம் - அத்தகைய, நமாமி - வணக்கங்கள்.

நினைப்பவர்களுக்கும், பூஜிப்பவர்களுக்கும் ஆனந்தத்தையும், பரம சுகத்தை அளிப்பவரே, நிர்மலமான ஞான உருவே, பிறப்பு இறப்பு, சுகம், துக்கம் போன்ற இரண்டு நியதிகளைக் கடந்து, 'தத்வம் அஸி' (அனைத்தும் நானே) தத்துவத்தை உணர்ந்து பரந்து விரிந்தவானைப் போல உயர்ந்து நிற்பவரே, மூன்று குணங்களைக் கடந்து, முக்காலங்களையும் உணர்ந்து அனைத்திற்கும் சர்வசாட்க்ஷியாக பரிமாணித்து உருவங்களைக் கடந்து சதா ப்ரம்மானந்தத்தில் திளைத்து பவித்ரமாக தனித்தோங்கி நிற்கும் என் கோடி குருவுக்கு நித்ய வந்தனம்.

ௐ

எல்லாம் நல்லகாலம்தான்!

**நாடி வந்தால்** **கோடி நலம்**

# ப்ரம்மகுரு
# ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகளின்
# அரூப-ரூப ஆராதனை

26 ஆம் ஆண்டு

# குருபூஜை
# வைபவ மலர்

**11.10.2019 ஞாயிற்றுக்கிழமை**

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பொன்முடி கோடீஸ்வரர் ராமநாத மஹாமடம், சாரிடபுள் & ரிலிஜியஸ் டிரஸ்ட்**
சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில், திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு - 635 811.
www.kodithathaswami.in kodithathaswami@gmail.com

**2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் நாள் ஞாயிறு அன்று குருபூஜை நிகழ்ச்சியின் அங்கமாக இந்த மலர் வெளியிடப்பட்டது.**

இந்தத் தொகுப்பில் விவரிக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் எங்கள் எண்ணத்துக்குள் பிரதிபலித்த விஷயங்கள். எங்கள் ப்ரம்மகுருவின் வழிகாட்டுதலோடு, அவரின் உதவியுடன் அவர்மேல் எங்களக்குள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாக அனுபவப்பூர்வமாக உணர்ந்தவை. மற்றும் நேரில் கண்டவை. அவைகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வது படிப்பவர்களின் நம்பிக்கையையும் அவர்களது மனநிலைப் பக்குவத்தையும் பொறுத்தது. முயன்றால் காண்பது பொருளாகும்.

**இந்த மலர் வெளிவர பொருளுதவியும், ஆதரவும், ஊக்கமும் அளித்த அன்பர்கள், திருவாளர்கள், ஸ்ரீதர்** (ஆம்பூர்), **விமல்** (ஆம்பூர்), **உமாசங்கர்** (பெங்களூரு), **ரவி** (ஸ்வீடன்) **ஆகியோருக்கு நன்றி.**

**கட்டுரையாளர்கள்:** ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம், சென்னை, ஸ்ரீ பிரேம்குமார் சென்னை, ஸ்ரீ குமரன் சக்திவேல், வேலூர், ஸ்ரீ நாராயணமூர்த்தி, வேலூர், ஸ்ரீமதி அபிராமி, ஆம்பூர்,

**மலர் தொகுப்பு : வெ.நாராயணமூர்த்தி**

**வெளியீடு:**

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பொன்முடி கோடீஸ்வரர் ராமநாத மஹாமடம், சாரிடபுள் & ரிலிஜியஸ் டிரஸ்ட்**

சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில், திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு - 635 811.

தொடர்புக்கு : **98949 96111, 99942 15036, 90802 20610**

www.kodithathaswami.in kodithathaswami@gmail.com

# முன்னுரை

இன்று (அக்டோபர் மாதம் 11ஆம் நாள்) ஒரு முக்கியமான நாள்.

இந்த சென்னப்பமலையில் அதிசயங்கள் நிகழத் துவங்கிய நாள்.
இந்த திருத்தலத்தை உலகிற்கு அடையாளம் காட்டிய நாள்.
இந்த உலகமே இதுவரை கண்டிராத ஒரு அற்புதமான, அதிசயமான, குருவை இந்த உலகிற்கு அறிமுகம் செய்த நாள்!
நாங்கள் மறக்க முடியாத நாள்!
'தாத்தா' என்று மரியாதையாகவும் செல்லமாகவும் அழைக்கபடும் எங்கள் பிரம்மகுரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகள் இந்தத் திருத்தலத்தில் ஐக்கியம் கொண்டு ஒரு புதிய ஆன்மீகப் புரட்சியைத் தொடங்கிய நாள்.
இந்த குரு தன் சீடராக ஸ்ரீ ராமநாதஸ்வாமியை ஏற்றுக்கொண்ட நாள்.
ஆயிரக்கணக்கான அன்பர்களை இங்கே ஈர்க்கத் தொடங்கிய நாள்.
பக்தர்கள் பலருக்கு வாழ்வளித்த நாள்.
ஒரு புதிய குரு-சிஷ்ய பாரம்பரியம் உருவான நாள்.
தன்னை நாடி வரும் அனைத்து தரப்பு மக்களும் ஜாதி, மத கலாச்சார பேதமின்றி பயனடைய இவர் தன் ஆன்மீகச் சேவையை துவக்கிய நாள்.
வாழ்க்கை தெறிமுறைகளுக்கு ஏற்றவாறு இந்த மண்ணின் வரலாற்றில் ஒரு புதிய சஹாப்தம் உருவான நாள். இன்று இந்த குரு இங்கு ஐக்கியம் கொண்டு 26 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவு கூறும் நாள்.

இது அரூப-ரூப குருபூஜை ஆராதனை. எங்கும், எதிலும் சர்வ வியாபியாக அருவத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு, 'கூடு விட்டு கூடு பாயும்' தெய்வீக கலையை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தி, தன் சீடன் உடல் வழியாக உருவம் பெற்று, தன்னை நாடி வரும் அன்பர்களுக்குக் கோடி நலம் வழங்குகிறார். இவரின் ஆசீர்வாதமே இங்கு பிரதானம். அதுவே அனைத்து இன்னல்களுக்கும் இறுதி தீர்வு.

எங்குமே காண முடியாத இந்த அதிசயம் இங்கு மட்டுமே நிகழ்கிறது. எதையும் எதிர்பாராமல் ஷிவக்யான ஜீவ சேவை செய்துவரும் இந்த மஹா குருவிற்கு எங்கள் நன்றிக்கடன் செலுத்தும் வைபவம் இது.

இந்த மஹானின் பூர்வீகம் யாருக்கும் தெரியாது. இந்த உலகின் வயதுதான் இவரின் வயது. இவருக்கு பெயரில்லை. உருவம் இல்லை. பசி இல்லை, உறக்கம் இல்லை. சூட்சுமத்தில் சஞ்சரிப்பவர்.

சென்னப்பமலைத் திருத்தலத்துக்கு எழுந்தருளும் முன் இவர் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி அருகில் புரவிப்பாளயம் ஜமீன் அரண்மனையில் வேறு ஒரு உடலில் வாழ்ந்தார். ஆயிரக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கை வழிகாட்டியாகத் திகழ்ந்தார். 1994ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 நாள், தான் வாழ்ந்த 423 வயதான உடலை விட்டு தேஹசித்தி அடைந்து, தன் சீடனைத் தேடி இங்கே வந்து ஐக்கியம் ஆனார்.

ஆத்ம போதனை தத்துவங்களுக்கு புத்துயிர் அளிக்க 2003ஆம் ஆண்டு இந்த உலகின் 13வது ஜோதிர்லிங்கத்தை, ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில், இந்தத் திருத்தலத்தில் உத்பவிக்க செய்துள்ளார்.

வேத சாஸ்த்ர ரகஸ்யாங்கங்களுக்கு விடை அளிக்கவும் மக்களை நல்லொழுக்க பாதையில் இட்டுசெல்லும் இறைப்பணியை, தன்னலமின்றி மேற்கொண்டுவரும் இந்த குருவின் மிகப் பெரிய சமுதாய பணியில் எங்களையும் இணைத்துக் கொண்டு தொண்டாற்றுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

இந்த மஹத்துவத்தை உங்களோடு பகிர்ந்துக் கொள்ளும் வகையில் இந்த மலர் இன்று வெளியிடப்படுகிறது. நாங்கள் பார்த்த, உணர்ந்த, அறிந்துகொண்ட சில விஷயங்களை, கருத்துக்களை, அனுபவங்களை இங்கே பதிவு செய்ய முயற்சி எடுத்து உள்ளோம்.

**புரவிப்பாளயத்தில் இவரின் அருள் வெள்ளத்தில் பலன் அடைந்த பலர் இந்த குருவின் தேஹசித்திக்குப் பின் இவரை தரிசிக்க முடியாது என்று தோய்ந்து போயிருக்கும் நிலையில், இவரின் ஆன்மீகப் பயணம் இன்னொரு அவதாரமாக புதியதொரு சரித்திரம் படைக்க இங்கே தொடர்கிறது என்கிற நல்ல செய்தி அறிந்து கொள்ள இந்த மலர் உதவும் என்று நம்புகிறோம்.**

அன்பே ஷிவமான இந்த குரு தோண்ட தோண்ட கிடைக்கும் புதையல், பெரிய பொக்கிஷம். ஞானக்கடல். அவரது முழு பரிமாணத்தையும் உணர முயற்சி செய்துவருகிறோம். எங்கள் அனுபவக் குவியல் இருந்து ஒரு சிறு துளியை இன்று உங்களுடன் பகிர்ந்துக் கொண்டு மகிழ்கிறோம்.

குருபூஜை விழாமலர் குழு.

# பிரம்மகுரு ஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகள் யார்?

இங்கே 'பிரம்மகுரு', 'கோடி' மற்றும் 'தாத்தா' என்று மூன்று வார்த்தைகள் உள்ளன. இவை வெறும் வார்த்தைகள் அல்ல. பட்டங்கள் அல்ல. காரணப் பெயரும் அல்ல. இவை இந்த அதிசய குருவை அடையாளம் காட்டும் உண்மை வார்த்தைகள். வேதங்களில் 'பிரம்மம்' என்றவார்த்தைக்கு 'பரந்து விரிந்த', 'பிரம்மாண்டம்', 'மிகப் பெரிய', 'எல்லா வரம்புகளையும் கடந்த', 'அளவிடமுடியாத' என்று அர்த்தங்கள் உள்ளன.

குரு என்பவர் அக்ஞானத்தைப் போக்கி ஞானத்தை உணர்த்துபவர். பிரம்மகுரு என்பவர் யார்? சாஸ்த்ரங்களையும் வேததத்வங்களையும் கற்று அவைகளில் உயர்ந்து நிற்பவர் ராஜ ரிஷி. அறிவும், ஆற்றலும் ஆளுமையும் ஒரு சேர இருப்பவர். சாஸ்த்ரங்களையும் வேதங்களையும் கற்று, அவைகளின் சாரம்ஸமான 'தெய்வீகம்தான் தன்னிலை என்பதை உணர்ந்து தவநிலையில் சஞ்சரிப்பவர் பிரம்ம ரிஷி. தவ வமையால் பிரம்மத்தை நேரடியாக உணர்ந்து, பிரம்மமாகி, அருவமாக சஞ்சரித்து, சதா பிரம்மானந்தத்தில் திளைப்பவர் பிரம்மகுரு. ஜெகத்குரு. தம் தவப் பலனங்களை தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு பகிர்ந்து அளித்து. அதில் பரம ஆனந்தத்தை கொடுத்து பேரானந்தப்படுபவர் பிரம்மகுரு.

## கோடி தத்வம்

கோடி என்றவார்தைக்கு 'அளவில்லாத', 'எல்லையில்லாத', 'முடிவில்லாத' என்று அர்த்தம். சம்ஸ்க்ருதத்தில் இதை 'அனந்தம்' என்பர். ஆங்கிலத்தில் "infinity'. கோடி என்கிறவார்த்தைக்கு தைத்ரிய உபநிஷதத்தில் அழகான விளக்கம் கிடைக்கிறது. சாதாரணமாக, நாம் நம் புலன்கள் வழியாக உணரக்கூடிய, அனுபவிக்கக்கூடிய அனைத்து பொருள்களும் 'தேச, கால, வஸ்து' ஆகிய மூன்று வரம்பு நியதிகளுக்கு உட்பட்டது. இந்த மூன்று வரம்புகளைத் தாண்டி இருக்கும் எதையும் நம்மால் உணராவோ, க்ரஹிக்கவோ முடிவதில்லை. உதாரணமாக, நாம் காணும் அனைத்து பொருள்களுக்கும் நம்மைச் சுற்றியுள்ள வெட்டவெளியில் ஒரு வரையறைக்கு, ஒரு பரிமாணத்துக்கு உட்பாட்டே உள்ளன. இங்கிருக்கும் ஒரு பொருள் இன்னொரு இடத்தில் இல்லை. நாம் இந்த உடலோடு ஒரு இடத்தில் மட்டுமே இருக்க முடிகிறது. இன்னொரு இடத்தில் ஒரே நேரத்தில் இருக்க முடிவதில்லை. எந்த ஒரு பொருளும் தேச வரம்பு எல்லைக்கு உட்பட்டே நமக்கு புலப்படுகிறது.

அதைப் போலவே கால வரம்பு என்பது ஒரு பொருளின் வாழ் காலம். ஸ்திரமாக இருக்கும் காலம். அது தயாராவதற்கு முன்னரும், அதன் அழிவுக்கும் பிறகும் அது இருப்பது இல்லை. நமது உடல் பிறப்பதற்கு முன்னர் இல்லை, இறந்த பிறகும் இல்லை. வாழும் காலம் ஒரு வரம்பிற்குள் மட்டுமே இருக்கும். நாம் உணரக்கூடிய அனைத்து பொருள்களும் ஒரு கால வரம்புக்கு உட்பட்டது.

வஸ்து வரம்பு என்பது ஒரு பொருளின் தனித்துவம். எந்த ஒரு பொருளும் அதைத் தவிர உலகில் உள்ள வேறு எந்த பொருளாகவும் இருக்க முடியாது. உதாரணமாக ஒரு குவளை பேனாவாக இருக்கமுடியாது. நாற்காலியாக இருக்கமுடியாது. குவளை குவளையாக மட்டுமே இருக்க முடியும். அது வேறு எதுவாகவும் இருக்கமுடியாது. வஸ்து வரம்பு ஒவ்வொரு பொருளுக்கும் தனித்துவம் தந்து இந்த உலகத்தில் உள்ள மற்றஅனைத்து பொருள்களிலிருந்தும் மாறுபடவைக்கிறது.

எந்த ஒரு பொருள் இந்த மூன்று வரம்புகளையும் தாண்டி இருக்கக் கூடும்? தேச வரம்பை மீறி இருக்கும் இந்தப் பொருள் இந்தப் பிரபஞ்சம் முழுதும் வியாபித்திருக்கும் அல்லவா? இதை சர்வ வியாபி என்பார்கள். கால வரம்பை மீறி இருக்கும் இந்தப் பொருள் அழிவே இல்லாமல் காலத்தை கடந்து இருக்கும் அல்லவா? இதை நித்யம் என்பார்கள். வஸ்து வரம்பு மீறும் இந்தப் பொருள் இந்த உலகில் உள்ள அனைத்து பொருள்களிருந்தும் மாறுபாடாமல் இருக்கிறது. இதுபோல இன்னொரு பொருள் இருக்க முடியாது. இது போல பொருளைத் தவிர இந்த உலகில் வேறு எதுவும் இல்லை. இதை பரம்பொருள், பிரம்மம் என்கிறது வேதங்கள்.

இங்கே இந்த குரு இந்த மூன்று வரம்பு நியதிகளைக் கடந்தவர். அனந்தமானவர். எங்கும் வியாபித்து இருப்பவர். நிரந்தரமானவர். பரம்பொருளானவர். இவரை போல இந்த உலகில் இன்னொருவர் இல்லை. இதுவே கோடித்தவம் இதை இந்த உலகிற்கு எடுத்துக்காட்டவந்த இவர் கோடி குரு.

## தாத்தா என்றால் என்ன?

தா+ அதா என்கிறஇரண்டு சொல்களின் சங்கமமே தாத்தா என்கிறவார்த்தை. சம்ஸ்க்ருத மொழியில் 'தா' என்றால் 'இங்கே' இப்போதே' என்று அர்த்தம். அதா என்றால் மங்களம், புனிதம், பவித்ரம் என்று அர்த்தம். அதாவது, இங்கே இப்போதே மங்களத்தையும், புனிதத்தையும் பவித்ரத்தைதும் அள்ளி வழங்குபவர். இதனால் இவரால் எதுவும், எங்கும், எப்போதும் நல்லதாக மாறும். அவரை தரிசிப்பதே நல்ல காலம். ஆசீர்வாதம் பெறுவதே ஜென்ம ஸாபல்யம்.

ஆக, அனைத்தையும் கடந்து, பரம்பொருளாக, நிரந்தரமாகவும், ஞானத்துவமாக நிலைகொண்டு, நாடி வரும் அனைவருக்கும், எப்போதும் மங்களத்தையும் புனிதத்தையும் பவித்ரத்தையும் அள்ளி வழங்கும் அதிசய குரு இவர். சத்யம், ஞானம் அனந்தம் பரப்பிரம்மம் இவர். வேதங்கள் சொல்லும் ரகசியமும் இவரே. ரகசியங்களின் விடையும் இவரே.

## சக்தி, பக்தி, முக்தி தரும் சென்னப்பமலை பிரம்மகுரு

உலகத்திலேயே அதிசயச ஸ்தலம் ஒன்று உண்டென்றால் அது சென்னப்பமலையாகத்தான் இருக்க வேண்டும். எது எப்படி என்று தெரிந்துகொள்வதற்கு முன், அதிசயம் என்று எதைச் சொல்கிறோம்? ஆச்சர்யப்பட வைக்கும், பிரமிக்க வைக்கும், புரிந்து கொள்ள முடியாத எதுவும் அதிசயம். உலகில் சில இடங்களை, கட்டிடங்களை ஏழு அதிசயங்கள் என்று ஏற்றுக்கொண்டுள்ளோம். இவைகள் அனைத்தையும் காட்டிலும் நம்மை அதிக அளவில் பிரமிக்கவைக்கும் இடம் சென்னப்பமலை. இதற்குக் காரணம் இருக்கிறது.

இந்தத் திருத்தலத்தில் நடக்கும் மூன்று விஷயங்கள் இதுவரை நாம் கேள்விப் படாதவை, பார்த்திராதவை. வேத சாஸ்த்ரங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள 'கூடு விட்டு கூடு பாயும்' தெய்வீகக் கலையை பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் எங்கும் பார்த்ததில்லை. இந்த அதிசயத்தை இங்கே பார்க்கலாம். இத் திருத்தலத்தில் ஐக்கியம் கொண்டுள்ள அருவ ரூபத்தில் சஞ்சரிக்கும் அதிசய குருவும், தன் உடலையே தன் குருவுக்கு தியாகம் செய்யும் அதிசய சீடனும் இதை நடத்திக் காட்டுகின்றனர். இந்த பிரம்மகுரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகள் தன் சீடன் ஸ்ரீ ராமநாதஸ்வாமிகள் உடல் ஐக்கியம் கொண்டு, உருவம் பெறுகிறார். இதுவரை இந்த உலக சரித்திரம் கண்டிராத அதிசயங்கள் இவை. சீடன் குருவாகி நம்மை ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம் நம் குறைகளைத் தீர்க்கிறது. நம் உடலையும், உள்ளத்தையும் எண்ணத்தையும் தூய்மைப் படுத்திப் பாதுகாக்கிறது. சீரான வாழ்க்கைக்கு துணையாக வருகிறது. நாடி வருவோர்க்கு கோடி நலம் குவிக்கிறது. புதிய சக்தி கிடைக்கிறது.

இன்னொரு அதிசயம் இங்கே உத்பவித்துள்ள ஜோதிர்லிங்கம். இந்த யுகத்தின் மிகப் பெரிய அதிசயம் இது. ஜோதிர்லிங்கங்கள் உயிரினங்களில் ஒளிந்து இருக்கும் இறைநிலையை பிரகடனப்படுத்துபவை. ஆத்மபோதனை அளிப்பவை. வேதாந்த பிரம்ம தத்துவத்தை உணர்த்துபவை. விஞ்ஞான மெய்ஞான ரகசியங்களுக்கு நேரடி விளக்கம் அளிக்கும் எளிய பக்தி சாதனங்கள். நாடி வந்தோருக்கு கோடி நலம் வழங்கும் அற்புத அமைப்பு இவை.

வணங்குபவர்களுக்கு துக்க நிவர்த்தி, பூஜிப்பவர்களுக்கு சாபவிமோசனம், உணர்பவர்களுக்கு ஜென்ம சாபல்யம் அளிப்பவை. பல யுகங்களுக்கு முன் தமிழ்நாட்டில் ராமேஸ்வரத்தில் ஸ்ரீ ராமனால் ராமலிங்கேஸ்வரர் ஜோதிர்லிங்கம் உருவாகியது இங்கே சென்னப்பமலையில் பிரம்மகுரு கோடி தாத்தா ஸ்வாமிகளால் 2002 ஆம் ஆண்டு ஸ்ரீ பொன்முடி சூர்ய நந்தீஸ்வரர்ஜோதிர்லிங்கம் தொடர்ந்து வரும் உத்பவ வரிசையில் 13 வது ஜோதிங்கமாக உத்பவித்தது. இது தமிழ்நாட்டின் இரண்டாவது ஜோதிர்ங்கம்.

குறைகளை மட்டும் களைய நினைப்பவர்களுக்கு பிரம்மகுரு ஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகளின் ஆசீர்வாதமே போதும். புதிய சக்தி கிடைக்கச் செய்கிறது. பக்தி மார்கத்தில் விடை தேடும் அன்பர்களுக்கு பிரம்மகுருவே ஜோதிர்லிங்கமாக ஆசீர்வதிக்கிறார். தன்னையும் தன்னைப் படைத்தவனையும் தேடி வரும் அன்பர்களுக்கு தன் ஞானத் தழல் கொண்டு முக்தி பிராப்தம் அளிக்கிறார் இந்த குரு. **ஆக, ஒரே இடத்தில் சக்தியை தேடுவோருக்கு சக்தியையும், பக்தியைத் தேடுவோருக்கு பக்தியையும் முக்தியைத் தேடுவோருக்கு முக்தியையும் அளிக்கும் அதிசய குருவை வேறு எங்கும் காணமுடியாது. இப்போது புரிகிறதா, சென்னப்பமலையைக் காட்டிலும் அதிசயமான ஸ்தலம் இந்த உலகில் வேறு எங்கு இருக்கமுடியும்?**

# அனுபவங்களே சாட்சி

## 1. புதிய வாழ்க்கையையேப் பரிசாகத் தந்த அதிசய குரு

சக்திவேல் குமரன், வேலூர்

மூன்று ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மஹாசிவராத்திரி நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். எனக்கு புத்துயிர் அளித்த நாள். நான் மீண்டும் புனர்ஜென்மம் எடுத்த நாள். அன்றுதான் இந்த பிரம்மகுருவை சந்தித்தேன். இந்த சந்திப்பிற்குக்கான காரணம் நானே. என் மூளையில் நரம்புமண்டலம் பாதிப்பு அடைந்துள்ளதாக மூன்று பெரிய, பிரபல மருத்துவமனைகள் தங்கள் ஆய்வில் தெரிவித்த நிலையில் என் வாழ்க்கையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டதாக உணர்ந்து மிகுந்த மனச்சோர்வுடன் இருந்தேன். உலகமே இருண்டது. மருத்துவங்கள் கைவிட்ட நிலையில், இந்த வேதனையோடு என் காலம் முடியப்போகிறதா? அல்லது இதிலிருந்து மீள வழி உள்ளதா என்றத் தேடல், பதட்டத்தில் தடுமாறிக் கொண்டிருந்தேன். உண்ணவும் முடியாமல் உறங்கவும் முடியாமல் நரக வேதனை அனுபவித்து வந்தேன். ஒரு வேளை சென்னப்பமலையே நான் தரிசிக்கும் கடைசி புண்ணியஸ்தலமோ என்றும் எண்ணினேன். இந்த நிலை நினைத்து கோபப்பட கூட என்னிடம் சக்தி இல்லை என்பதையும் உணர்ந்தேன். செய்வதற்கு ஒன்றுமில்லாத தருணத்தில் மௌனம் ஒன்றுதான் என் மொழியானது. கடந்தகாலமும் எதிர்காலமும் என் கண் முன்னே அர்த்தமில்லாமல் தோன்றி மறைந்து விளையாடுவது போல தோன்றியது. இந்த நிலையில்தான் , நண்பரின் உதவியுடன் இந்த மஹானை சந்தித்தேன். அவரை பார்க்கும் போதே எனக்கு பேச்சு வரவில்லை. என் கஷ்டங்களை சொல்லக்கூட தோன்றவில்லை. அவரின் தீர்க்க பார்வை என்னைத் துளைத்தது. அவரின் ஆழ்ந்த மௌன மொழி என்னுள் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியது. அவர் என்னைத் தொட்டு ஆசீர்வதித்த பொது என் மனதில் ஆக்கபூர்வமான சிந்தனைகள் மலர்ந்ததை உணரமுடிந்தது.இந்த உணர்வு மிக நுட்பமானது. இதை விவரிக்க முடியாது. என் வாழ்க்கைப் பற்றிய, என் உடல் நோய் பற்றிய என் மனதில் சதா

துளைத்துக்கொண்டிருந்த எதிர்மறைஎண்ணங்கள் கரைந்து என் உடலும் மனதிலும் ஒரு விவரிக்கமுடியாத சுத்திகரிப்பு நிகழ்வதை என்னால் உணரமுடிந்தது. இருள் மறைந்து, நம்பிக்கை ஒளி தெரியத் தொடங்கியது. ஒரு பெரும் அமைதியை நீண்ட நாட்களுக்குப் பின்னர் அனுபவித்தேன்.

ஒரு புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்ததை போல இருந்தது. 'குணமாகும் என்கிற எண்ணத்தை நம்பிக்கையுடன் முழு சக்தியுடன் உன் மனத்தில் நினத்திரு. அதுவே உன்னை குணமாக்கும்' என்று இந்த குரு சொல்லிய வார்த்தைகள் என்னுள் புதிய உத்வேகத்தை அளித்தது. இந்த குருவையும் அவரின் அறிவுரைகளையும் முழுமையாக ஏற்றுக்கொண்டு என்னுள் அனுமதித்தேன். அதிலேயே மூழ்கினேன். அடுத்த சில நாட்களிலேயே ஆச்சர்யம் காத்திருந்தது. மீண்டும் மேற்கொண்ட ஆய்வு அறிக்கைகள் உடல் சீராகி வருவதை காட்டின. நரக வேதனையிருந்து மீண்டுவிட்டேன். அமைதியும், ஆனந்தமும் என் வாழ்க்கையில் மீண்டும் மலரத்தொடங்கியது. இப்போது இன்னும் விமரிசையாக புலப்படுகிறது. மாயமில்லை, மந்திரமில்லை. இந்த குருவின் ஆசீர்வாதம் மட்டுமே.

நண்பர்களே, இந்த குரு நம்பிக்கை அளிக்கும் குரு. அவரின் பார்வையே நம்மை செம்மைபடுத்தும். இவரின் வெளிப்பாடே தெய்வீகம் என்பதையும் உணரமுடியும். கெட்ட காலம் மறைந்து நம் மனதும் எண்ணங்களும் சீர் படுவதை உணரலாம். இருள் மறைந்து வெளிச்சம் தெரிவதை உணரலாம். இந்தத் தாத்தா நம்மை எதையும் துறக்கச்சொல்வதில்லை. எதுவும் போதிக்கவில்லை. எல்லாம் இருக்கிறபடி இருக்கட்டும். கூட தெய்வீகத்தை சேர்த்துக்கொள்ளுங்கள். அது அற்புதங்களைச் செய்யும். அவரை தரிசிப்பது, அவரின் ஆசி நமக்கு ஒரு புதிய திருப்பத்தையும், புத்துணர்வையும் தரும். நேரில் பார்க்கமுடியாத நேரத்தில் கூட அவர் என் அருகில் எனக்குள் இருப்பதை, வழித்துணையாக என்னோடு வருவதை உணர்கிறேன். என் இதயம் இவரோடு இணைக்கபட்டிருக்கும் அதிசயத்தை ஒரு பெரிய பாதுகாப்பு கவசமாக ஏற்றுக்கொண்டுவிட்டேன். இப்போது நான் இருக்கும் இந்த வாழ்க்கை, இந்த உடல் அனைத்தும் அவர் எனக்குத் தந்த தெய்வீகப் பரிசாக நினைக்கிறேன். எவ்வளவு பெரிய பிரச்சனைகளுக்கும் இவரிடம் எளிய தீர்வு கிடைக்கும் ரகசியத்தை இப்போது புரிந்துகொண்டுள்ளேன். நுட்பமான இந்த தீர்வுகள் இருக்கும் இடம் தெரியாமல் பாவம் எவ்வளவு பேர் அலைந்து கொண்டிருக்கிறார்கள்?

## 2. தேடிவந்து ஆட்கொண்ட குரு!

மீனாக்ஷிசுந்தரம், சென்னை.

எவ்வளவு தேடினாலும் நமக்கேற்ற குருவை அடையாளம் காண முடிவதில்லை. ஆனால் குரு அருள் இருந்தால் அவரே நம்மை அடையாளம் கண்டு ஆசி கொடுப்பார். இது என்னளவில், என் வாழ்க்கையில் நடந்த உண்மை. திருநாவுக்கரசு ஸ்வாமிகள் எப்படிப்பட்ட பக்தர்? சாக்ஷாத் பரமேஸ்வரனே வந்து தீக்ஷை கொடுத்த போது அதை

அவரால் உணர முடியவில்லையே. அர்ப்பபதர் ஆகிய நான் முதலில் இந்த குருவை பார்த்து அடையாளம் கண்டு கொள்வேனா என்ன? எனக்கும் அதற்குரிய நேரம் வர வேண்டாமா? சைவ சமயத்தில் சுந்தரரும் ஈஸ்வரனும் தோழர்பாவனை என்று சொல்லுவார்கள். அதுபோல எனக்கும் பிரம்மகுரு கோடிதாத்தா ஸ்வாமிகளுக்கும் இருக்கும் பாவனை ஆனது அப்படியே, என்னை ஆட்கொண்டதும் அப்படியே! சுந்தரரின் திருமணத்தில் பரமன் தடுத்தாட்கொண்டார் எனக்கு நான் வேலை செய்யும் வங்கியில் வந்து என்னை ஆட்கொண்டார். எங்களுடைய சந்திப்பும் குருவின் தொடர் ஆசியும் இறைவன் கருணை ஏற்பாடு. என் ஜென்ம புண்ய பலன் என்று கூட சொல்லுவேன். நான் சொல்லுவது அதிசயமாக இருக்கும். குருவே என்னைத் தேடி வந்து ஆசி வழங்கினார். என்னுடைய வங்கி வாடிக்கையாளராக! சாதாரணமாக இருந்த என் வாடிக்கையாளர் ராமநாதன், திடீரென்று கோடி தாத்தாவாக மாறியதும் சொல்லொணா வியப்பு. என்னால் நம்பவே முடியவில்லை. முதல் சந்திப்பு மட்டுமல்ல ஒவ்வொன்றும் அதிசயம் மிகுந்த கடுமையான நோய்வாய்பட்டு போராடிக்கொண்டிருந்த என் மனைவி புனர் ஜென்மம் பெற்றது இந்த குருவால்தான்.

என்னுடைய மகள் இப்போது கனடாவில் இருக்கிறாள் அவளை பார்த்த டாக்டர் ரெண்டு நாளுக்குள் கரு கலையாமல் இருந்தால் குழந்தை உண்டு என்று சொல்விட்டார் எனக்கு ஒன்றும் புரிய வில்லை தாத்தாவிடம் முறைபோயிட்டேன் அவர் கவலைப்படாதே நான் போயி பார்த்துக்கொள்கிறேன் என்றார். அப்படியே பார்த்துக்கொண்டார் இப்போது குழந்தை பிறந்து ஒரு வருடம் ஆகிறது என் அனுபவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம் எங்களுக்கு எங்கள் குடும்பத்திற்கு அவர் கண் முன்னே தெரியும் கடவுள் அவர் ஆசியும், அரவணைப்பும் கிடைத்ததை பூர்வ ஜென்ம புண்ணியமாக கருதுகிறோம்.

## இந்த குரு எங்கும் எதிலும் வியாபித்திருப்பதை என்னால் உணரமுடிகிறது

அபிராமி, ஆம்பூர்

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலாக பிரம்மகுரு ஸ்ரீ கோடிதாத்தா ஸ்வாமிகளை நான் தரிசித்தது மறக்க முடியாத அபாரமான அனுபவம். அவரை பார்க்கும்போதே, நமஸ்கரிக்கும்போதே எனக்குள் ஒரு மாற்றத்தை உணரமுடிந்தது. என் பிறவியின் காரணத்தை உணர்ந்து இந்தத் திருத்தலத்திலேயே தங்கி இந்த மஹாகுருவுக்கு ஆத்ம சேவை செய்ய வேண்டும் என்றவேட்கை அப்போதிலிருந்தே என்னை ஆட்கொண்டது. இந்த மன நிலைக்குக் காரணம் தெரியாதபோதும், சென்னப்பமலைப் புண்ணிய க்ஷேத்ரம் என்னை வெகுவாக ஈர்த்தது. அடிக்கடி தனியாக மிதிவண்டியில் இங்கு வந்து தியானம் செய்வேன். எனக்குள் ஏதோ ஒரு சக்தி என்னை வழி நடத்துவதை உணரத் தொடங்கினேன். என் வாழ்க்கை முறை, பழக்க

வழக்கங்கள், அணுகுமுறை, சிந்தனைகள் எல்லாம் மெதுவாக செம்மைபடத் தொடங்கின. ஒரு மஹாசக்தி என்னை ஸ்வீகரித்திருப்பதை என்னால் உணர முடிந்தது.

சில நிர்பந்தங்களால் நான் வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால், என்னால் குருவைக் காண இங்கே வரமுடியாமல் போனது. ஆனால் இந்தத் திவ்யத் திருத்தலத்தில் நித்யமும் இருந்து சேவை செய்யும் ஒரு பெரிய வாய்ப்பை சுமார் 20 ஆண்டுகள் கழித்து தற்போது எனக்கு கிடைக்கச் செய்துள்ளார் என் குரு. எத்தனை ஜென்மங்கள் நான் அவரோடு பயணத்திருக்கிறேனோ தெரியவில்லை. இப்போது இந்த பயணம் இங்கே தொடர்கிறது. என் சேவையில் முழுமையாக ஈடுபட்டு இந்தப் பிறவிப்பயனை உணரத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த பிரம்மகுருவை அடிக்கடி தரிஸிக்கும் வாய்ப்பும் அவர் அறிவுரைகளை கேட்பதற்கான சந்தர்பங்கள் இப்போது அதிகம் கிடைத்திருப்பது பெரும் பாக்கியம். 'புரிதல், அறிதல், உணர்தல்' குறித்த குருவின் வழிகாட்டுதல் எனக்குள் இருந்த குழப்பங்களைத் தெளிவு செய்து அதன் வழியாக இந்த குருவின் அவதார மஹிமையை உணரச் செய்கிறது. ஒரு நாள் விஸ்வ ரூப தரிசனம் குறித்து நண்பர் ஒருவர் பேசக் கேட்டேன். பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இந்த ரகசியத்தை அர்ஜுனனுக்கு நேரடியாக உணர்த்துகிறார். அப்போது அர்ஜுனனுக்கு அவன் பார்க்கும் அனைத்து பொருள்களிலும் அவனையே கண்டு பிரமித்துப் போனானாம். அதுபோல நான் காணும் அனைத்தும் நம் குருவின் ஸ்வரூபம். அவர் எங்கும் எதிலும் வியாபித்து இருப்பதை என்னால் உணரமுடிகிறது.

மூலிகைகளுக்கு மாபெரும் சக்தி உண்டு. அவை வளரும் இடம், பறிக்கபடும் நேரம், உண்பவருக்கு ஏற்றவகையில் மருந்தாக மாறும் தன்மை ஆகியவை தேவ ரகசியம். இவை அனைத்தையும்தாண்டி நம் குருவின் திருக்கரங்களில் இந்த மூலிகைகள் தெய்வீக வீர்யம் பெற்று ஆசீர்வாதத்தோடு கலந்து அளிக்கும்போது அது பெறுபவர்களுக்கு அம்ருதமாகவே மாறும் அதிசயத்தை இங்கே நான் கண்கூடாகப் பார்க்கிறேன்.

ஜென்ம ஜென்மமாக சேர்த்து வைத்திருக்கும் கவலைகள், சோகங்கள், கஷ்டங்கள் கலந்த சுமைகளோடு நிவர்த்தி தேடி பலபேர் இந்த புண்ய க்ஷேத்ரத்திற்கு வந்து அலை மோதுவதை பார்க்கிறேன். குருவின் ஆசீர்வாதம் பெற்றவுடன் அவர்களிடம் ஏற்படும் மாற்றங்கள், அனைத்து துக்கங்களையும் விட்டு விலகி நிற்கும் மனப் பக்குவம், அவர்கள் கண்களில் தெரியும் ஆனந்தம், நம்பிக்கை ஒளி, பக்தி பரவசம் என்னை சந்தோஷப் பட வைக்கிறது. ஆச்சயப் பட வைக்கிறது. நம் பிரம்மகுருவே மக்கள் சேவை செய்ய மஹேசனாக வீற்றிருக்கும் இந்தத் திருத்தலத்தில் தன்னை நாடி வரும் அன்பர்களின் இன்னல் போக்கி, குறைதீர்த்து, அருள் சேர்க்கும் அவரது இந்தப் புனிதப் பணியில் என்னையும் இணைத்துக் கொண்டது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று புளகாங்கிதம் அடைகிறேன்.

# எண்ணங்களைச் செம்மைப்படுத்தும் சென்னப்பமலை சித்தர்!

எதிர்மறை (Negavtive) எண்ணங்கள் என்னை விடாது தொல்லைப் படுத்துகின்றன. இவைகளிருந்து எப்படி விடுதலை பெற்று என்னைக் காத்துக்கொள்வது? என்று ஒரு நண்பர் கேட்டார். 'இந்தகைய எண்ணங்கள் என்னை தவறான முடிவுகளுக்கு கொண்டுசெல்வதொடு தொடர் தொல்லைகளிலுமே சிக்கவைக்கின்றன. எல்லோரிடமும், எனக்கும் நான் நல்லவனாக இருக்க விரும்புகிறேன். ஆனால் முயன்றாலும் என்னால் நல்லதனமாக இருக்க முடியவில்லை. இதுதான் விதியா? எனக்கு விமோசனம் இல்லையா?' என்று மேலும் புலம்பினார்.

அவருக்கு ஆறுதல் சொல்லும் வகையிலும் சில விஷயங்களைத் தெளிவு படுத்தும் வகையிலும் நான் எடுத்துரைத்த கருத்துக்களின் சாராம்சம் இது. முதல் நாம் யார் என்பதைத் தெரிந்துகொள்வோம். நாம் பார்க்கும் இந்த உடலுக்கு ஸ்தூல சரீரம் என்று பெயர். பஞ்ச பூதங்களால் ஆனது. இதற்குள்ளே இந்த உடலை இயக்கும் சக்திகள் கொண்ட சூட்சும சரீரங்கள் உள்ளன. ப்ராண சரீரம், மனம் மற்றும் எண்ணங்களைக் கொண்ட மனோ சரீரம், அதற்கும் உள்ளே நாம் பகுத்தறியும் புத்தி சரீரம் உள்ளது. மனோ சரீரத்தில் தோன்றும் எண்ணங்கள் தோன்றி மறைந்துகொண்டிருக்கும்.

நாம் எண்ணங்களால் ஆனவர்கள். எண்ணங்கள்தான் நம்மை இயக்குகின்றன. இது நம் உடல் மற்றும் மன ஆரோக்யத்தை முடிவு செய்யும் கருவி. மனதில் எண்ணங்கள் சில நேரங்களில் நேர்மறை (Positive) எண்ணங்களாகவும், எதிர்மறை எண்ணங்களாகவும் தோன்றும். நல்ல எண்ணங்கள் தோன்றி அவைகளை செயலாக்கும்போது நாம் நல்லவனாகத் தோன்றுகிறோம். எதிர்மறை எண்ணங்கள் நம்மை தீயவனாகத் தோன்றச் செய்கின்றன. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது இதன் அடிப்படையில்தான். பெரும்பாலான எதிர்மறை எண்ணங்கள் நமக்குள்ளே புதைந்து கிடப்பவை. பல காலங்களுக்கு முன்னர் தோன்றிய எண்ணங்கள்,

அவைகளைத் தொடர்ந்த சில நிகழ்வுகள் போன்றவையும் இதில் அடங்கும். இங்கே காலம் என்பது சில ஆண்டுகள், அல்லது சில முந்தைய பிறவிகளாகவும் இருக்கலாம். மனதுக்குள் அடைக்கபட்டு கிடக்கும் இத்தகைய எதிர்மறை எண்ணங்கள் சில நேரங்களில் நீர்க்குழிகள் போன்று கொப்பளித்து வெளிவரும். வியாச மஹாமுனி எழுதிய யோக சூத்ரத்தில் இத்தகைய எண்ணங்களின் தொடர் வெளிப்படும் போக்கை 'சம்ஸ்க்காரம்' என்று குறிப்பிடுகிறார். இத்தகைய வெளிப்பாடு எந்த காரணமில்லாமலும் வெளிப்படலாம். அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட நிகழ்வை சந்திக்கும்போது வெளிப்படலாம். சில நேரங்களில் நம்முடைய பழைய நினைவுகள் மற்றும் செயல்களிருந்தும் அவைகளின் ஆறாத வடுக்கள், ஆசை, கோபம், தாபம், தற்காப்பு,

காழ்புணர்வு, குற்றஉணர்வு போன்றவைகளாலும் இது நிகழலாம். எந்தக் கட்டுப்பாடின்றி அவைகளின் எதிர் விளைவுகளைத் தெரிந்தேயும் வெளிப்படலாம்.

இந்தகைய எதிர்மறை எண்ணங்கள் வெளிப்படும்போதும் அவைகளினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பின்விளைவுகள் (எதிர்மறைவிளைவுகளாகக் கூட இருக்கலாம்) பல நேரங்களில் சிக்கல் சிக்க வைத்தாலும், சில நேரங்களில் அல்ப சந்தோஷத்தை அளிக்கக் கூடிய வகையிலும் இருப்பதாலேயே அவை மீண்டும் மீண்டும் வெளிப்படுகின்றன. இந்தைகய எண்ணங்கள் கொடூர வார்த்தைகளாகவும், நடத்தைகளாகவும் அதைவிடக் கொடூர செயல்களாகவும் அல்லது அனைத்தும் கலந்தும் வெளிப்படலாம். சில நேரங்களில் நமக்குத் தெரிந்தே நிகழும் இத்தகைய எண்ணங்களின் தாக்கத்தை நினைத்தும் அவைகளிருந்து விடுபட வழிதெரியாது கலங்கும் நேரமும் உண்டு.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் . நம் ஆழ் மனதில் புதைந்துள்ள இந்த சம்ஸ்கார பெட்டகத்தை நம்மால் திறந்து எதிர்மறைஎண்ணங்களை அழிக்கமுடியாது. இது நம்முடனேயே ஒன்றிப்போனது. நவீன விஞ்ஞானம் இதை மரபு குறியீடு (Genetic code) என்று வர்ணித்தாலும், சாஸ்த்திரங்கள் இவைகளை அழிக்கமுடியாத 'பூர்வஜன்ம கர்ம வினைகள்' என்று ஆணித்தரமாக சொல்கின்றன.

இந்த எதிர்மறைஎண்ணங்கள் தொடர்ந்து வெளிவந்து நமக்குத் தீராத தொல்லைகள் அளிக்கும் திறமை கொண்டவை. இத்தகைய எதிர்மறை எண்ணங்கள் மனதின் ஆழத்திருந்து வெளிவந்து நம்மை ஆட்கொண்டால் அந்த நிலைக்கு 'வ்ருத்தி' என்று பெயர். வ்ருத்தி அடைந்த எதிர்மறைஎண்ணங்கள் அடுத்து நம் வழியாக செயல் வடிவம் பெறுகின்றன. இப்படியே சம்ஸ்க்கார பெட்டகத்திருந்து எதிர்மறைஎண்ணங்கள் தொடர்ந்து வெளிவந்து வ்ருத்தி ஆகி, செயல்வடிவம் பெற்று ஒரு சுழற்சி நிலையை பெறுகின்றன. இதை 'சம்ஸ்க்கார ரூபசக்ரம்' என்கிறது வியாச யோக ஸூத்ரம். அமைதியான நீர்நிலை கொண்ட ஏரியில் சிறு சிறு அலைகள் உருவாகி ஏரிக்கரைக்கு வந்து தாக்குவது போல இந்த சம்ஸ்க்காரரூப சக்ரம் சுழன்று வ்ருத்தியாகி நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போதெல்லாம் நமக்குள்ளே அன்றாடம் நாம் சந்திக்கும் நிகழ்வாக அமைகிறது.

இதை 'ஏவம் வ்ருத்தி சம்ஸ்க்காரரூப சக்ரம், அஹம்நிஷம் வர்தமானம்' என்று அழகாக வர்ணிக்கிறது வியாச யோக ஸூத்ரம். இதைப் புரிந்து கொள்ள ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு கம்ப்யூட்டரில் அல்லது மொபைல் போனில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் மென்பொருள் இந்தக் கருவிகளை ஒவ்வொரு முறை துவக்கும் போதும் இயக்கத் தயார் நிலைக்கு கொண்டு வருவது போல இந்த எதிர்மறைஎண்ணங்கள் நாம் ஒவ்வொரு முறைவிழித்தெழும் போதெல்லாம் நமக்குள் வ்ருத்தியாகி தயார் நிலைக்கு வந்துவிடுகின்றன.

'நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இது மனோவியாதி போலத் தெரிகிறதே. தக்க மருந்துகள் மூலமாக மனதை சுத்திப்படுத்திக் கொள்ளலாமே. ஒரு நல்ல மனோதத்துவ மருத்துவர் இருந்தால் சொல்லுங்களேன்' என்றார் நண்பர் அப்பாவியாக. நவீன விஞ்ஞான வல்லுனர்கள் வெகுவாக முயன்றும் இதுநாள் வரை மனசையோ, எண்ணங்களையோ 'சரிப்படுத்தும் (அல்லது செம்மைபடுத்தும்)' தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்கமுடியவில்லை. அந்த அளவுக்கு இன்னும் விஞ்ஞான அறிவு வளர்ச்சி அடையவில்லை. ஸ்தூல சரீரத்தில் ஏற்படும் சிறு சிறு கோளாறுகளை தற்போது ஓரளவுக்கு, அதுவும் தற்காலிகமாகச் சரி செய்யும் அளவுக்கு மட்டுமே விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறதே தவிர, அதைத் தாண்டி சூட்சும சரீரங்களில் ஏற்படும் கோளாறுகளை தெரிந்துகொள்ளவோ அல்லது அவைகளை அணுகவோ இன்னும் முடியவில்லை என்று விளக்கினேன்.

' அப்படியென்றால் இதற்கு என்னதான் தீர்வு? நீங்கள் வேதங்களில் எல்லாமே இருக்கிறது என்று சொல்கிறீர்கள். வேதங்கள் பிரச்னைகளை மட்டும் சொல்லிவிட்டால் போதுமா? அவைகளுக்கு தீர்வு சொல்லவேண்டாமா? என்று நறுக்கென்று கேட்டாரே பாருங்கள். ஐயா நிச்சயமாக இருக்கிறது. ஒன்று நாமே முயன்று செய்துக்கொள்வது. இரண்டாவது, நம்மைப் படைத்தவன் மட்டுமே செய்யக்கூடியது. 'அவித்ய-காம-கர்ம' என்பது ஒரு வாழ்வியல் வட்டம். தவறானக் கல்வி (அல்லது அறியாமை), தேவை இல்லாத இச்சைகளை உருவாக்கும். இச்சைகளின் எதிர்மறைவிளைவே கர்ம வினைப்பலன்கள். நாம் பார்ப்பது, உணர்வது அனைத்தும் நம் அறியாமையால் ஏற்படும் பிம்பங்கள். இதிருந்து 'உண்மையை' அறிந்து பிரித்து எடுக்க கடும் பயிற்சியும் உழைப்பும் தேவை. ஒரு வழி நாமே முயன்று செயல்படுவது. மனதை ஒருநிலைபடுத்தும் தியானம், எண்ணங்களை திசைதிருப்புதல், பக்தி வழி, தர்மகாரியங்கள் செய்வது போன்றவை ஓரளவுக்கு பலன் தரும். இது மிகவும் கஷ்டமான காரியம். நாம் நம்நிலை உணர்ந்து, உயர்நிலையை அடையவேண்டும். உடலை வருத்திக் கொண்டு கால விரயம் செய்தால் பலன் கிட்டும். இரண்டாவது இந்தப் பயிற்சி அளிக்க ஒரு முற்றும் அறிந்த குருவை நாடுவது. அவரைத் தேடி, அடையாளம் கண்டு அவர் அருள் பெறுவது என்பது சுலபமில்லை. இதற்கெல்லாம் நீண்ட காலமாகலாம். இந்த பயிற்சி, முயற்சி அனைத்தும் பலனளிக்காமலும் போகலாம்.

தைத்ரீய உபநிஷத்தில் இத்தகைய எதிர்மறைஎண்ணங்களிருந்து 'விடுதலை' பெறசில சுலப வழிவகைகள் சொல்லப்பட்டுள்ளன. அதற்கு முதல் உங்களைத் தயார் செய்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீ சங்கராச்சாரியார் இந்த உபநிஷத்தத்துக்கு தான் எழுதிய விளக்க உரையில், இந்த விடுதலை பெற நான்கு வழிகளைச் சொல்லியுள்ளார். முதல் இந்த விடுதலை அடைவதற்கான தெளிவு, பகுத்து அறியும் திறன் (விவேகம்) வேண்டும். தேவை இல்லாததை விலக்கும் 'வைரக்யம்' வேண்டும். இதைப் பெறவேண்டுமானால் நம்மைப் பற்றியும் நம்மை சுற்றியுள்ள உலகைப்பற்றியும் தெரிந்து, அறிந்து புரிந்து கொள்ளவேண்டும்.

தேடுதல் இல்லாமல் நிவாரணம் இல்லை. எப்படி ஒரு விளக்கு தன்னை சுற்றியுள்ள இருட்டை போக்கி, பொருள்களை நமக்கு அடையாளம் காட்டுகிறதோ அது போல ஞானம் நமக்கு பல விஷயங்களைப் புரியவைக்கும். ஆனால் இதற்கு பொறுமையும், ஒழுக்கக் கட்டுபாடுகளும், முனைப்பும், தெளிவும், தேவை இல்லாதவைகளை (இச்சைகளை) பகுத்தறிந்து களையும் திறனும் தேவை.

வைராக்ய நிலை அடைவது சுலபமல்ல. இதற்கு நம்மைப் பற்றிய 'விசாரணைகள்' நமக்குள்ளே மேற்கொள்வது, எதிர்மறைஎண்ணங்களிருந்து, இச்சைகளிருந்து விலகி நிற்கும் பயிற்சி, (சிரத்தை) விடாத முயற்சியும் தேவை. இதைத் தவிர, சாம (மனதைக் கட்டுப்படுத்தும் திறமை), தாம (உடல் உறுப்புக்களை கட்டுபடுத்துதல்), உபரதி (உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல்), சமாதான ( ஆழ்ந்த முனைப்பு) ஒழுக்கப் பண்புகளும், சிரத்தை (நம்பிக்கை)யும் தேவை.

இது ஏறக்குறைய தவ நிலை. இதை அடுத்து முமுக்ஷுத்வ நிலை(இந்த அனைத்து நிலைகளைக் கடந்து இலக்கை அடைய தேவைப்படும் தீவிர வேட்கை). இலக்கை அடையும்போது, நமக்குள் இருக்கும் ஆத்மன், ஆதித்யனைப் போல நமக்குள் பிரகாசித்து தெய்வீகத்தைக் காண, உணர வழி கிடைக்கும். அந்த பிரம்மாண்ட ஜோதியில் நமக்குள் இருக்கும் அனைத்து எதிர்மறைஎண்ணங்களும் கரைந்து நம்மை செம்மைபடுத்தும்.

இத்தகைய பிரச்சனைகளிருந்து மக்களைக் காக்கவே அந்த காலத்தில் குருகுல பாரம்பரியத்தை ஏற்படுத்தி, வேத சாஸ்திரங்களை கற்றுத் தரவும், பயிற்சி அளிக்கவும் அவர்களை நல்வழிபடுத்தவும், அவர்களுக்கு இந்த எதிர்மறைஎண்ணங்கள் அளிக்கும் தொல்லைகளிலிருந்து விடுதலை அளிக்கவும் வசதி-வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இந்தத் தத்துவங்களைப் புரிந்து கொள்ளாமல், நாம் இந்த அமைப்புகளை அழித்துவிட்டோம். வேதங்கள் என்றாலே 'சமஸ்க்ருதம்', 'வட மொழி', 'அது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்கு மட்டும்' என்று முத்திரை குத்தி, வெறுத்து ஒதுக்கிவிட்டு நமக்கு நலன் தரும் ஞான சாஸ்திரங்களின் மேல் இருந்த நம்பிக்கையை சிதைத்துக் கொண்டு விட்டோம். இப்போது அவஸ்தை படுகிறோம்.

நீங்கள் சொல்வது சரி. தப்பு செய்து விட்டோம். இப்போது என்னைப் போன்றப் பாமரர்களுக்கு என்னதான் நிவாரணம்? இந்த காலத்தில் வேதங்களில் சொல்லியுள்ள வழிமுறைகளை சொல்லித்தரவோ, செய்து காட்டவோ யாரும் இல்லை. அப்படியே இருந்தாலும் எங்களால் கற்றுக்கொள்ளவும் முடியாது. நேரமும் இல்லை. நாங்கள் இப்படியே போராடி மாண்டு போகவேண்டியதுதானா? எங்களைக் காப்பாற்றயாருமே இல்லையா? வேறு வழியே இல்லையா? என்று கண்ணீர் வடிக்கக் துவங்கினார் நண்பர்.

வழி இருக்கிறது நண்பரே. கவலையை விடுங்கள். வேலூர் மாவட்டம் (தற்போது திருப்பத்தூர் மாவட்டம்) ஆம்பூர் அருகில் எங்கள் குரு இருக்கிறார். முக்காலமும் உணர்ந்த மஹாசித்தர் இவர். கோடிசாமி. பிரம்மகுரு. கோடி ரூபம். எங்கும் வியாபித்து இருப்பவர். உலகின் வயது இவருக்கு. ஆதி குரு. சிவமே சித்தமாகி, அருவமே உருவமாகி சீடனே குருவாகி, குருவே ஜோதியாகி நமக்குள் இருக்கும் தீய சக்திகளை அழித்து நம்மை நல்வழிப் படுத்தும் பிரம்ம குரு இவர். உண்மை, ஞானம் எல்லையில்லா ஆனந்தத்தைத் தந்து பிரம்மத்தை உணரசெய்வதால் இவர் 'சத்யஞானஅனந்தபிரம்ம' சொரூபம் கொண்டவர்.

சென்னப்பமலை என்ற புராணத் திருத்தலத்தில் பிரசன்ன கம்பீரமாக, அன்பே சிவமாக ஐக்கியம் கொண்டு, உங்களைப்போல திசைதெரியாது அல்லல் படும் அன்பர்களுக்கு அபாயக்காரம் நீட்டி, பரிவுடனும் பாசத்துடனும் துயர் துடைத்து அவர்களை செம்மைப்படுத்தி வருகிறார்.

**'கூடு விட்டு கூடு' பாயும் தெய்வீக சக்தியை நமக்காகவே பயன்படுத்தும் இந்த பிரம்ம குருவின் ஆசீர்வாதமே நமக்குள் இருக்கும் சம்ஸ்க்கார பெட்டகத்தைத் திறந்து எதிர்மறைஎண்ணங்களை சுத்தப்படுத்துகிறது. எண்ணங்கள் செம்மைபடும்போது அளவில்லாத, எல்லை இல்லாத, முடிவில்லாத 'கோடி' ஆனந்தம் உணர்கிறோம். இது தெய்வீகம். படைத்தவன் மட்டுமே செய்யக்கூடிய விந்தை அது. அத்தகைய அளவில்லாத, எல்லையில்லாத, முடிவில்லாத பரமானந்தத்தை இவர் அளிப்பதால் இவரை நாங்கள் பரிவுடனும், பாசத்துடனும் 'கோடி தாத்தா' என்று அழைக்கிறோம்.**

ஆனந்தம் மட்டும் அல்ல, உங்கள் மனதை, எண்ணங்களையும் சுத்தப்படுத்தி, எதிர்மறைஎண்ணங்களை நேர்மறையாக்கி, நம்பிக்கை தந்து, தைரியத்துடன் வாழ்க்கைப்பயணம் தொடர இந்த குரு வழிவகை செய்கிறார். **எப்படி நிகழ்கிறது இந்த அதிசயம்? ஒரு முறை நீங்கள் அவர் கால் விழுந்து ஆசிர்வாதம் பெறும்போது! எந்தக் கஷ்டமும் இல்லாமல், எந்த செலவும் இல்லாமல், எந்தப் பின் விளைவுகளும் இல்லாமல் ஒரு பேரதிசயம் நிகழ்கிறது. அந்த நொடி வரை நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் அனைத்து எதிர் மறைஎண்ணங்களும், அதைச் சேர்ந்த கர்ம வினைகள், சாபங்கள் அனைத்தும் அங்கேயே கரைந்து விடுகிறது. விஷத்தை உண்டு அம்ருதத்தை அளிக்கும் கருணாமூர்த்தியாக, உங்கள் கழிவுகளை ஏற்றுக்கொண்டு உங்கள் மனதில் அம்ருதமாக நல்ல எண்ணங்களை விதைத்து, அவைகளை செயல் படுத்தும் உத்வேகத்தையும் நம்பிக்கையையும் இணைத்து உங்களை ஒரு புதிய மனிதனாக, 'கோடி நலன்கள்' தந்து அனுப்புகிறார் இந்த குரு.** புதிய மனிதனாக புது பிறவி எடுத்தது போல உணர்கிறீர்கள். உண்மையான நல்ல காலம் இங்கே துவங்குகிறது உங்களுக்கு. உங்கள் ஜென்மம் ஸாபல்யம் பெறுகிறது. இந்த அம்ருதத்தை நஞ்சாக்காமல். வைத்துக்கொள்வதும் ஆனந்த நிலையைத் தொடர்ந்து அனுபவிக்க, தக்கவைத்து கொள்வதும் உங்கள் சாமர்த்தியம்.

புரவிப்பாளையத்திலிருந்து சென்னப்பமலையில் ஐக்கியமான

# தெய்வீக

## சங்கிலித் தொடர்

















# வெள்ளிவிழா ஆண்டு (2019) குருபூஜை வைபவ நிகழ்வுகள்






# வெள்ளிவிழா ஆண்டு (2019) குருபூஜை வைபவ நிகழ்வுகள்















# 2019 யாத்திரைகள் - ராமேஸ்வரம், தனுஷ்கோடி, உத்ரகோசமங்கை


















அப்படியென்றால் இந்த ஆசீர்வாத பலன் தொடர்ந்து நிலைக்காதா? அது உங்கள் கையில் உள்ளது. இந்த குருவிடம் மீண்டும் மீண்டும் ஆசீர்வாதம் பெறுவதன் வழியாக இந்த பலன் தொடர்கிறது. அதையும் தாண்டி ஒரு ரகசியம் சொல்கிறேன். 'நீ உண்மையை உணர்ந்தால் நீ என்னிடம் வரத் தேவையில்லை. நானே உன்னைத் தேடி வருவேன்' என்று இந்த குரு கூறுகிறார். அப்படியென்றால் என்ன பொருள்? **நாம் யார் என்கிறஉண்மையை உணரும்போது உண்மையின் சொரூபமான அவருடனேயே ஒன்றிப் போகிறோம். இந்த குரு எப்போதும் நாம் கூடவே இருக்கும்போது நமக்கு எப்போதும் நல்ல காலம்தானே? நமக்கு நல்ல எண்ணங்களையே தந்து அவைகள் நல்ல வகையில் நாம் செயல் படுத்த அவர் நம் கூடவே இருந்து வழிகாட்டும்போது சிக்கல்களும் சோகங்களும் எப்படி நம்மை அணுகும்? இதுவல்லவோ உண்மையான விடுதலை? இதுவல்லவோ சாஸ்திரங்கள் சொல்லும் மோட்சம்?** நண்பர் ஆடிப்போய் விட்டார். கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு. 'சென்னப்பமலைக்கு எப்படி போகவேண்டும்? முதல் இந்த விஷயத்தை என் குடும்பத்தார்களுக்கும், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் சொல்அவர்களுக்கும் விடுதலை பெற்றுத் தரவெண்டும். இவ்வளவு நாள் என் வாழ்க்கையை வீணடித்துவிட்டேனே' என்றார் அங்கலாய்த்துக்கொண்டு. (இது உண்மையாக நிகழ்ந்த உரையாடல்)

## கோடி குருவின் ஆசீர்வாதத்தின் மஹத்துவம்

நம் குருவிடம் ஆசீர்வாதம் பெரும் அனைவரும் அவர் தரும் புஷ்பம், அட்சதை, கல்கண்டு பிரசாதம் ஆகியவற்றை கவனித்திருப்பீர்கள், பெற்றுக்கொண்டும் இருப்பீர்கள். இவைகளின் பின்னால் மறைந்திருக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளும்போது இதன் பொருள் புரிய ஆரம்பிக்கும். புஷ்பங்கள் ஐஸ்வர்யத்தை தரும். அட்சதை ஆயுளைப் பெருக்கும். கல்கண்டு ஆரோக்யத்தைத் தரும். இதோடு, தாத்தா பேசும் இனிமையான வார்த்தைகள் மனதிற்கு இதத்தை அளிக்கிறது. ஒரு ஆசீர்வதம் வழியாக நான்கு பலன்கள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் அனைவருக்கும் கிடைக்கிறது.

ஐஸ்வர்யம் என்பது எட்டு வகையான செல்வங்கள். இவை நல்ல உணவு, தைர்யம் (அல்லது பலம்), அமைதி (அல்லது சாந்தம், அன்பு, இரக்க குணம், ஆனந்தம்), நல்ல சந்ததிகள், வெற்றி, நல்ல இல்லம் (செழிப்பு), அறிவு ஆகியவை ஆகும். சில நேரங்களில் கல்கண்டையும், பழங்களையும் தன் திருவாயிட்டு ஒரு சில அன்பர்களுக்குத் தருகிறார். இது அம்ருதம். சர்வ ரோக நிவாரணி. ஜென்ம ஸாபல்யம் தரும் எட்டக்கனி. சிலருக்கு தன் பாதங்களாலும் கைகளாலும் தொட்டு ஆசீர்வதிக்கிறார். இது தெய்வசித்தி ஆசீர்வாதம். அத்யந்தக துக்க நிவர்த்தி, பரமானந்த பிராப்தி தரும் அதிசய ரக்ஷை. பாதுகாப்பு வளையம். இந்த ரகசியத்தை புரிந்து கொண்டு ஆசீர்வாதம் பெறும்போதும் அதன் பலன்களை அனுபவிக்கும்போதும் இந்த குருவின் மஹத்துவம் புரிய ஆரம்பிக்கும்.

# எல்லாமே மூன்று! ஒன்றே மூன்றாகும் அதிசயம்!

நம் குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கோடிதாத்தாஸ்வாமிகளுக்கு ஏன் மூன்று 'ஸ்ரீ' ?
முதல் அவர் யார் என்று தெரிந்து கொள்வோம்.

நீராகாரி (உருவமில்லாதவர், அருவநிலையில் சஞ்சரிப்பவர்)
நீர்விகாரி (மாற்றங்களை கடந்தவர், மாற்றமே இல்லாதவர், நிரந்தரமாக இருப்பவர்)
நிராபாசி (இன்னொருவர் போல இருக்கிறார் என்று சொல்லமுடியாதவர். உதாரணம் இல்லாதவர், சொற்களால் விவரிக்கமுடியாதவர், அனைத்திருந்தும் மாறுபட்டவர்)
நிராமயி (பரிசுத்தமானவர், முழுமையானவர், புருஷர்களுக்கெல்லாம் உத்தமமானவர்)

சத்ய ஞான அனந்தமானவர், எங்கும் நிறைந்திருப்பவர், அனைத்தையும் உணர்ந்தவர், எல்லைகளோ, முடிவுகளோ இல்லாதவர்.
தத்வதசி- தத்வங்களை விளக்க வந்தவர்: மூன்று தத்துவங்களான த்வைதம் விசிஷ்ட அத்வைதம் மற்றும் அத்வைதம் ஆகிய வகைகளை ஒரே நிலையிலே விளக்குகிறார்.
மூன்று நிலையில் ஆசிர்வாதம் செய்கிறார்: அருவமாக, மனிதனாக, லிங்கமாக.
இந்த ஆசிர்வாதம் மூன்று குணங்களை (சத்வம், ரஜஸ், தமஸ்) சமண்படுத்துகிறது.
உடல், உள்ளம், ஆத்ம சுத்தம் கிடைக்கிறது.

மூன்று சரீரங்கள் ( ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம்) வழியாக நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது. நம் குரு மூன்று காலங்களையும் உணர்ந்தவர். தேச, கால, வஸ்து வரம்புகளால் அவரை உணரமுடியாது. அண்டத்துள் பிண்டமாகி, பரம்பொருளே பொருளாகி, ஷிவமே சித்தனாகி, சித்தனே குருவாகி, பஞ்ச பூதங்களை தன் கட்டுக்குள் கொண்டு சீடனுள் குருவாகி தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு ஆசீர்வாதம் செய்கிறார்.

எவ்விதம் ஆசீர்வதிக்கிறார்? மூன்று அம்சங்களை கொண்ட அதிஉசிதமான ஆசீர்வாதம். க்ருத்தக் கிரித்வா தயா (செய்ய வேண்டியவைகளை திறம்பட செய்ய வரம்), ப்ராபண்ய பிராப்தி தயா (அடைய வேண்டியதை அடைவதற்கான அனுக்ரஹம்) க்யாதப்ய க்யாத தயா (தெரிந்துகொள்ள வேண்டியதை தெரிந்து கொள்ளும் வரம்) இதனால்
மூன்று குழப்பங்கள் தீருகின்றன: பிரமாண அசம்பவான (உடல் மனம் ரீதியான குழப்பங்கள். அதனால் ஏற்படும் கஷ்டங்கள்) பிரமேய அசம்பாவன (தெளிவு தேடி அலையும் குழப்பங்கள்) விபரீத அசம்பாவன (நம்மை பற்றிய கற்பனைகள், பழக்கவழக்கங்கள், மாற்றிக்கொள்ள முடியாத எண்ணங்கள்) எங்குமே கிடைக்காத ஒரு புதிய யோகசித்தி இங்கே கிடைக்கிறது இதற்குப் பெயர் அஸ்பர்ஷ யோகா (பார்த்தாலே பரவசம் கிடைப்பது). இதன் போதனை அமனீய பாவ (மனம் லேசாகி, நிம்மதி கிடைப்பது).

## குழந்தைகளுக்கான ஆன்மீகக் கல்வி

இன்றைய காலகட்டத்தில் இளைய தலைமுறையினர் நம் தெய்வீக வாழ்வியல் முறைகளை விட்டு விலகி மேலை நாட்டு கலாச்சாசாரங்களில் மூழ்கியுள்ளனர். இதனால் தங்களை வருத்திக்கொள்வதோடு தங்கள் பெற்றோர்களையும் வருத்தத்தில் சிக்கவைத்து அல்லல் படும் நிலைமையை பார்க்கமுடிகிறது. நம் பாரம்பரிய ஆன்மிக கலாசாரத்தை மதிக்கவோ அல்லது பின்பற்றவோ அவர்களின் கல்விமுறை, தொழில்நுட்ப தாகம் இந்த சீரழிவை மேலும் தீவிரமாக்குகின்றன. நம் பாரம்பரியத்தை மீண்டும் நிலைநிறுத்த குழந்தைகளை நல்வழிப் படுத்தும் உன்னத பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகிறது. இந்த வகையில் அவர்களுக்கு எளிய வகையில் புரியும்படி சில ஸ்லோகங்களை சொல்லிப் பழக்கி அவர்களை மீட்டெடுப்போம். ஆன்மிக வாழ்க்கை முறைக்கு ஏற்றவகையில் அவர்களை தயார் செய்து அவர்களைக் காப்போம்.

காலையில் எழுந்தவுடன் இரண்டு கைகளையும் சேர்த்து பிடித்து கொண்டு ஜபிக்கவேண்டிய ஸ்லோகம்:

### கர தர்சனம்

கராக்ரே வசதே லக்ஷ்மி, கர மத்யே சரஸ்வதி
கரமூலே ஸ்தத கௌரி, மங்களம் கர தர்ஷணம்

கைகளின் விரல்களில் லக்ஷ்மி குடியிருக்கிறாள். கையின் மத்தியில் சரஸ்வதி வசிக்கிறாள். கை மூட்டுகளில் கௌரி (பராசக்தி) வசிக்கிறாள். காலையில் எழுந்தவுடன் இந்த மூன்று தெய்வங்களையும் (லக்ஷ்மி-செல்வம், சரஸ்வதி-கல்வி, பார்வதி-தைர்யம்) வணங்கினால் மங்களம் உண்டாகும்.

### பூமி வந்தனம்

சமுத்ர வசனே தேவி, பர்வதஸ்தன மண்டலே
விஷ்ணு பத்னி நமஸ்துப்யம், பாதஸ்பர்ஷ க்ஷமஷ்வமே

சமுத்ரங்களை ஆடையாகக் கொண்டு, பர்வதங்களை தன் மார்பில் ஏந்திக்கொண்டிருக்கும் ஸ்ரீவிஷ்ணுவின் பத்னி ஸ்ரீ லக்ஷ்மியே, பூமித் தாயே, தினம் என் கால்கள் உன்மேல் படுகின்றன. என்னை மன்னித்து ஆட்கொள்வாயாக.

### (குளிக்கும்போது) ஸ்நான விதி

கங்கேஷு யமுன செய்வா, கோதாவரி சரஸ்வதி
நர்மதே சிந்து காவேரி, ஜலேஸ்மின் சன்னிதிம்கரோ

கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்ரமதை, சிந்து, காவேரி ஆகிய ஏழு புண்ய நதிக் கடவுளர்களே, நீங்கள் அருளியுள்ள இந்த நீரை உங்கள் ஆசீர்வாதமாக ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் புனித நீரால் என் உடலையும், பாவங்களையும் சுத்தப் படுத்திக்கொள்கிறேன்.

### சூர்ய வந்தனம்

ஆதித்யஸ்ய நமஸ்காரா, யே குருவந்தி தினே தினே
ஜன்மாந்த்ர சஹஸ்ரேஷு தாரித்ரம் நோபஜாயதே

சூர்யதேவனை தினம் பூஜிப்பவருக்கு ஆயிரம் ஜென்மங்களாக சேர்த்து வைத்த பாவங்கள் அழிக்கப்படுகின்றன. அவர்களுக்கு செல்வச் செழிப்பு உண்டாகும்.

### சரஸ்வதி வந்தனம்

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர்பவது மேஸதா

ஹே சரஸ்வதி. எல்லோருடைய இஷ்டங்களையும் பூர்த்தி செய்பவளே. உன்னை துதித்து நான் படிக்க ஆரம்பிக்கிறேன். என் முயற்சி வெற்றி அடைய ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

### உறங்கப் போகும் முன்
### மஹாதேவ் வந்தனம்

கர்சர்ண க்ரிதம் வாக்காயஜம் கர்மஜம் வ
ஷிரவான யானஜாம் வா மானசம் வாபராதம்
விஹிதம் அவிஹிதம் வா சர்வம் எதத் க்ஷமஸ்வ
ஜய ஜய கருணாப்தே ஸ்ரீ மஹாதேவ ஷம்பூ

---

## என் குரு எப்படிப்பட்டவர்?

**யஸ்யந்தம் நதி மத்யம் (ஆதியும் அந்தமும் மத்யமும் இல்லாதவர்)**
**நஹிகர சரணம் (கை, கால்கள் (உடல் அவயங்கள்) இல்லாதவர்)**
**நமகோத்ரம், ந ஸூத்ரம் (பெயரோ, குலமோ கோத்ராமோ இல்லாதவர்)**
**நோ ஜாதிர்நைவா வர்ணோ ந பவதி (ஜாதியோ, வர்ணமோ இல்லாதவர்)**
**புருஷோ நோ நபும்சம் ந ச ஸ்த்ரீ (ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, இடையட்டவரும் இல்லை)**
**நாகரம் நோவிகாரம் நஹி ஜனிமரணம் (உருவமோ, உணர்ச்சிகளோ இல்லாதவர், பிறப்போ இறப்போ இல்லாதவர்)**
**நாஸ்தி புண்யம் ச பாபம் (அவருக்கு புண்யமோ பாவமோ இல்லை)**
**நோ அததத்வம் தத்வமேகம் (அனைத்து தத்வங்களையும் கடந்தவர் )**
**ஸஹஜ சமரசம் சத்குரும் தம்நமாமி (அனைவருக்கும் ஸஹஜமானவர், எதையும் ஏற்றுக்கொள்பவர். என் சத்குருவே உங்களுக்கு கோடி வந்தனம்)**

### குருவை எப்படி ஆராதிக்கிறேன்?

த்யான மூலம் குரூர் மூர்த்தி (என் குருவின் உருவமே என் த்யானத்தின் கரு)
பூஜா மூலம் குரூர் பாதம் (என் குருவின் பாதங்களே என் பூஜையின் கரு)
மந்த்ர மூலம் குரூர் வாக்யம் (என் குரு வாக்யங்கங்களே என் மந்த்ரங்கள்)
மோக்ஷ மூலம் குரூர் க்ருபா (என் குருவின் ஆசி ஒன்றேஎன் மோட்ச பலன்)
நித்ய ஷூத்தம் நிராபாசம் நிராகாரம் நிரஞ்சனம் (பவித்ரமாகவும், ஒளிர்ந்து கொண்டும், உருவமில்லாலும், அபய ஆசீர்வதம் அளித்து)
நித்ய போதம் சிதானந்தம் குரூர் பிரம்ம நாமாம்யஹம் (சிதானந்தத்தை சதா போதிக்கும் என் பிரம்மகுருவே உங்களுக்கு கோடி வந்தனம்)

## எதைத் தேடுகிறோம் - சந்தோஷமா? ஆனந்தமா?

நாம் வாழ்நாள் முழுதும் எதைத்தேடி அலைகிறோம்? யோசித்துப் பாருங்கள். எது நமது அடிப்படை, அத்தியாவசியத் தேவை என்று நினைக்கிறோம்? நல்ல வசதியான வாழ்க்கை, நல்ல குடும்பம், அமைதி, கை நிறையப் பணம், நல்ல ஆரோக்யம், நல்ல உறவுகள், வளமான சமுதாயம், உலக அமைதி என இந்தப் பட்டியலில் நீண்டுக் கொண்டே போகிறது . இவற்றில் சில பொதுநலத் தேவைகள், சில தனிமனிதத் தேவைகள். ஆனால் நம் தேவைகளை உற்று நோக்கும்போது அடிப்படையில் நாம் தேடி அலைவதெல்லாம் நிலையான சந்தோஷம், திருப்தி, மன நிறைவு. பட்டியல் கண்ட கனவுகளை அடைந்தால் நமக்கு நிரந்தர சந்தோஷம் கிடக்கும் என்றநப்பாசை. சந்தோஷத்தை அடைவதற்காக பல விதமான தடங்கல்களை, கஷ்டங்களை, சோகங்களைச் சந்தித்தாலும் சந்தோஷத்தை தேடுவதை மட்டும் நிறுத்துவதில்லை. ஏன் இப்படி அலைகிறோம்? ஏனென்றால் துக்கங்களை நம்மால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. அதற்கு மாற்று மருந்தாக, நிவர்த்தியாக சந்தோஷத்தைத் தேடுகிறோம். இதுதான் நம் பிறப்பின் அடிப்படை இயல்பு.

ஆனால் இந்த சந்தோஷத் தேடல் எவ்வளவு பேர் வெற்றி அடைய முடிகிறது? உலகிலேயே அதிகமாக உழைத்து பணம் சம்பாதித்த செல்வந்தர்களாலோ, அதீத கல்வி, அதி உயர்ந்த பதவி, புகழ் பெற்றவர்களோ, அதிக மனைவிகள் குழந்தைகளைக் கொண்டவர்கள் கூட அவர்கள் சந்தோஷமாக இருப்பதாகவோ அல்லது தங்கள் சந்தோஷத் தேடல் முடிந்து விட்டதாகவோ உறுதியாக சொல்லமுடியவில்லையே? விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் வளர்ந்தாலும் காலங்காலமாக மனிதன் தான் அனுபவிக்கும் துக்கங்களைக் களையவும் முடியவில்லை, தவிர்க்கவும் முடியவில்லை, நிலையான சந்தோஷத்தையும் அடைய முடியவில்லை. ஆனாலும் இந்தத் தேடலை ஏன் விடவும் முடிவதில்லை?

சந்தோஷத்தை நாம் எப்போதுமே வெளிஉலகில் தேடிக் கொண்டிருக்கிறோம். அது வெளியில் இல்லை, நமக்குள் இருக்கிறது. நாமேதான் அது. அது நிரந்தரமற்றஅற்ப சந்தோஷம் அல்ல, நிரந்தரமான பேரானந்தம் என்கிறது வேதாந்தம். நாம் சந்தோஷம் என்று எதை உண்மையில் நாடுகிறோம்? **'விஷய இந்த்ரீய சங் யோகா'** என்று விளக்கம் அளிக்கிறது யோக சாஸ்த்ரம். நம் புலன்களும் நாம் இச்சைபடும் பொருள்களும் இணையும் போது உணரும் சுகம். இத்தகைய சுகத்தை 'காம' மற்றும் 'காஞ்சன' என்றஇரண்டு பாதைகளில் தேடுகிறோம் என்று நம் முன்னோர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். 'காம' என்பது இச்சை, பிரேமை, சுகம், கேளிக்கை, மோகம், ஆசை. 'காஞ்சன' என்பது செல்வம், குடும்பம், பதவி, அந்தஸ்து, புகழ், மரியாதை இத்யாதிகள். காம காஞ்சன பாதையில் மிக எளிதில் நமக்கு சந்தோஷம் கிடைப்பதாக எண்ணி, தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். இந்த வேட்கை போதையாக மாறுகிறது. இந்த இரண்டு பாதைகளும் நிச்சயமாக நம்மைத் தவறான இடத்துக்கு அழைத்து செல்வதோடு

மட்டுமல்லாது மேலும் பல இச்சைகளைத் தூண்டுகின்றன. தாகம் அதிகமாகிறது. நம் வாழ்க்கை அனுபவங்களே இதற்கு ஆதாரம். இரண்டு பாதைகளும் நிச்சயமாக நம்மைத் தவறான இடத்துக்கு அழைத்து செல்வதோடு மட்டுமல்லாது மேலும் பல இச்சைகளைத் தூண்டுகின்றன. தாகம் அதிகமாகிறது. நம் வாழ்க்கை அனுபவங்களே இதற்கு ஆதாரம்.

நம் எதிர்பார்ப்பு நிறைவேறுவதாகத் தெரிவதில்லை என்பதை வெகுவிரைவில் உணர்கிறோம். நாம் சேர்த்த அத்தனை செல்வங்களும், அனுபவித்த சுகங்களும் நிலையற்றவை, சந்தோஷ தாகத்தை தீர்க்கமுடியாதவை, நமக்கு பயன்படாதவை என்பதை காலம் கடந்தாவது புரிந்துகொள்கிறோம். மிஞ்சி நிற்பது என்னவோ ஏமாற்றம், சோகம், துக்கம், ரோகம், அமைதியின்மை, ஆதங்கம், பயம், பாதுகாப்பின்மை. இவைகளிருந்து விடுதலை பெறமீண்டும் விடை தேடி அலைகிறோம். அதில் மேலும் தவறுகளை செய்கிறோம், இன்னும் பெரிய பிரச்சனைகளில் சிக்குகிறோம். இந்தச் சக்கரம் சுழன்றுக் கொண்டே இருக்கிறது.

சரி, சந்தோஷமோ, ஆனந்தமோ எவ்வளவு இருந்தால் திருப்தி? தங்கள் அறியாமையால் மனிதர்கள் தேடி அலையும் உலக சந்தோஷத்துக்கும், தேடி உணரவேண்டிய உண்மையான ஆனந்தத்துக்கும் உள்ள வித்யாசத்தை தைத்ரீய உபநிஷத்து அழகாக படம் பிடித்து காட்டுகிறது. இளம் வயது, அழகான தோற்றம், பலம், ஆரோக்ய உடல்வாகு, அளவுக்கு மீறிய கல்வி ஞானம், சர்வகலா ஞானம், ஆசையான குடும்பம், அளவுக்கு மீறிய செல்வம், மிகப் பெரிய பதவி, அதிகாரம், சமுதாய அந்தஸ்து, புகழ் ஆகியவை கொண்டு ஒரு இளைஞன் அனுபவிக்கக் கூடிய சந்தோஷத்தை எண்ணிப் பாருங்கள். இதை நமக்குத் தெரியாத, இதுவரை உணராத ஆனந்தத்தின் ஒரு அளவீடு என்று வைத்துக்கொள்வோம்.

இதைப் போல நூறு மடங்கு சந்தோஷத்தை மனுஷகந்தர்வ லோகத்தில் (சில மானுடர்கள் தங்களின் நல்ல கர்ம உபாசனைகளின் பலன்களை அனுபவிக்க கந்தர்வகளாகி இந்த லோகத்துக்கு செல்கின்றனர்) வாழ்பவர்களால் அனுபவிக்கமுடியும். அதைவிட நூறு மடங்கு அதிக சந்தோஷத்தை தேவ கந்தர்வ லோகத்தில் வாழ்பவர்கள் அனுபவிக்கமுடியும். இதைவிட நூறு மடங்கு அதிக சந்தோஷத்தை பித்ரு லோகத்தில் (நம் முன்னோர்கள் வாழும் லோகம்) வாழ்பவர்கள் அனுபவிக்கமுடியும். இதைவிட நூறு மடங்கு அதிக சந்தோஷத்தை கர்ம தேவ லோகத்தில் (வேததர்ம கர்மங்களில் சிறந்தவர்கள் இங்கே செல்கின்றனர்) வாழ்பவர்கள் அனுபவிக்கமுடியும். இதைவிட நூறு மடங்கு அதிக சந்தோஷத்தை தேவர்களின் மந்த்ரிகளால் (வசுக்கள், ருத்ரர்கள், அதித்யர்கள்) அனுபவிக்கமுடியும். இதை விட நூறு மடங்கு அதிக சந்தோஷத்தை தேவர்களின் தலைவன் இந்த்ரனால் அனுபவிக்கமுடியும். அதைவிட நூறு மடங்கு சந்தோஷத்தை தேவகுருவான ப்ருஹஸ்பதியால் அனுபவிக்கமுடியும்.

இதைவிட நூறுமடங்கு சந்தோஷத்தை ஸ்ருஷ்டிகளின் தலைவனான ப்ரஜாபதியால் அனுபவிக்கமுடியும். அதைவிட நூறு மடங்கு சந்தோஷத்தை சிருஷ்டி செய்யும் பிரம்மதேவனால் அனுபவிக்கமுடியும். ஆக, அனைத்து வகையான, மிக உயர்ந்த ஆனந்தங்களின் அளவிடக்கூடிய அளவீடு இது. ஆனால், இவையெல்லாவற்றையும் காட்டிலும், பல மடங்காக அளவிடமுடியாத பிரம்மானந்தமே, பேரானந்தமேதான் நாம். இதுவே நம் உண்மை சொரூபமான ஆத்மன் என்று நமக்கு இன்ப அதிர்ச்சியைத் தருகிறது வேதங்கள். இந்தப் பேரானந்த கடலே நாமாக இருக்கும்போது, இதை உணராமல் ஒரு சிறு துளி அளவுக்கு நம் உடல், மனம், எண்ணம் அணுகும் உலக சந்தோஷத்தைப் பெரிதாக நினைத்து அதில் நாட்டம் கொண்டு, அவைகளை அடைவதிலேயே நம் வாழ்க்கையை வீணடித்து வருகிறோம் என்றும் நம்மை பார்த்து வேதனைப்படுகிறது வேதங்கள். இரவில் ஓடும் நீரில் காணும் சந்திர பிம்பத்தை நிஜவிளக்கு என்று எண்ணி அதைத் துரத்தி விளையாடும் மீன்கள்போல, நாமும் சந்தோஷங்களை நிஜம் என்று கற்பனை செய்துக் கொண்டு துரத்துகிறோம்.

வேதாந்தம் நம் தவறைச் சுட்டிக்காட்டுவதோடு நிற்கவில்லை. இதற்கான தீர்வையும், வழிமுறைகளையும் சொல்கிறது. அடிப்படையில் நாம் மிகப் பெரிய தவறை தொடர்ந்து செய்து வருகிறோம். இது நம் உண்மை இயல்பைப் பற்றி நாம் தவறாக எண்ணிக் கொண்டிருப்பது. 'இது என்னுடையது, அது என்னுடையது, இந்த உடல் என்னுடையது. இந்த உடலே நான்தான்' என்று நம் இளம் வயதிருந்தே நம் மனதில் இந்த நிலைப்பாடு ஆரம்பிக்கிறது. இந்த உடல், உள்ளம், எண்ணம், புத்தி சேர்ந்த சிறிய மனித உருவமே 'நாம்' என்று நினைத்துக்கொண்டு இந்தப் பரந்த உலகை அணுகுகிறோம். இதற்கு முக்கிய காரணம் நம் புலன்கள் அனைத்தும் வெளி உலகை நோக்கிப் பாயும் தன்மை கொண்டவை. அதனால் நம் உலகம் வெளியே என்று நம்மை நம்ப வைக்கின்றன. நமக்குள்ளே இன்னொரு உலகம், வெளி உலகைக் காட்டிலும் பல மடங்கு பெரிய உலகம், நம் உண்மையான உலகம் இருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் யோசிப்பதில்லை. பழகியப் போக்கை விட்டு, நம் உண்மையான இயல்பு என்ன என்பதை ஆராய முயல்வதில்லை. நாம் உண்மையில் யார்? நமக்கும் நாம் பார்க்கும் இந்த உலகிற்கும் என்ன தொடர்பு? இந்த அடிப்படையான, உண்மையான இயல்பை உணர்வதற்கான உள்நோக்கிப் பயணித்து நம்மைப் பற்றிய உண்மையை உணருவதே 'ஆத்மஞானம்'. இந்த உயர்நிலை ஞானத்தைப் பெற நமக்கு துணை புரிகிறது வேதாந்தம்.

இது மிகப் பெரிய ரகசியம், நம் உண்மை இயல்பைப் பற்றி நமக்கே தெரியாமல் புதைந்து கிடக்கும் தேவரகசியம். உண்மையில் இந்த ரகசியத்தின் விடையைத் தேடித்தான், இதைதான் தேடுகிறோம் என்றுகூட தெரியாமல், அதை சந்தோஷம் என்றுத் தேடிக்கொண்டிருக்கிறோம். தெரிந்துகொண்டு விடை தேடுவது வேதாந்தம். தெரியாமல் தேடிக்கொண்டிருப்பது சம்சாரம். கரடுமுரடான நம் வாழ்க்கைப் பயணம்.

ஒரு சிலரால் மட்டுமே இந்த ரகசியத்துக்கான விடையை அறிய முடிகிறது. அவர்கள் ஞானிகளாகி பெரும்பாலும் மனித சமுதாயத்தை விட்டு விலகிச் சென்றுவிடுகின்றனர்.

நம் அடிப்படை இயல்பே ஆனந்த ஸ்வரூபம்தான் என்று வேதாந்தம் ஆணித்தரமாகக் கூறுகிறது. அளவிடமுடியாத, எல்லையேயில்லாத, உணர்வுகளுக்கெல்லாம் உணர்வான, நிலையான, அனைத்தையும் கடந்த பேரானந்த ஸ்வரூபம்தான் உண்மையான 'நாம்'. அருவமான ஆத்மன். சத் சித் ஆனந்தம். தெய்வீகம். இது ஒன்றே இந்த உலகில் உண்மையானது, நிலையானது. நம் உடல் புலன்கள் வழியாக நாம் அனுபவிக்கும் இந்த உலகம் (நம் உடலும் சேர்த்து) அவ்வப்போது தோன்றி மறையும் வெறும் தோற்றமே. கண்களால் பார்க்கும் இந்த உலகம் கண்களை மூடிக்கொண்டால் காணாமல் போகிறது.

ஒரு சினிமா பார்க்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். திரையில் நாம் பார்க்கும் உருவங்கள் அனைத்தும் நிஜமாகவேத் தோன்றுகிறது. அவைகளை வெறும் ஒளிபிம்பங்கள் என்று எண்ணுவதில்லை. பிம்பங்களே உண்மையான மனிதர்கள் என்று அவர்களை நாமாகவே பார்க்கிறோம். அவர்கள் சிரித்தால் சிரிக்கிறோம். அழுதால் அழுகிறோம், அடித்தால் கைதட்டுகிறோம். காட்சி முடிந்ததும் எல்லாம் மறைந்துபோகிறது. திரை ஒன்றே நிஜமாக நிற்கிறது. காட்சி தெரியும்போது திரை தெரிவதில்லை, திரையை உணரும்போது காட்சி வெறும் பிம்பங்களே என்ற உண்மை புரிகிறது. பிம்பங்கள் திரையைச் சார்ந்தே உள்ளன. ஆனால் பிம்பங்களால் திரைக்கு எந்த பாதிப்பும் இல்லை. அது போல நாம் காணும் இந்த உலகம் நம் மனத்திரையில் தெரியும் அனுபவ பிம்பங்கள். ஆனால் நம் புலன்கள் இந்த அனுபவத் தோற்றங்களை நிஜம் என்று தவறாக நினைத்து, அவைகளிலேயே நாட்டம் கொள்கிறது.

தூக்கத்தில் நம் மனத்திரையில் நாம் காணும் காட்சிகள் எப்படி விழிப்பு ஏற்பட்டதும் காணாமல் போகிறதோ அதுபோல விழித்திருக்கும் நிலையிலும் நாம் காணும் தோற்றங்கள், தூங்கும்போது காணாமல் போகிறது. நம் அனுபவங்களில் மறைந்துள்ள உண்மையை உணரும் தன்மையை, வளர்த்துக்கொள்வதே ஆன்மிகம். ஒரு அன்னப்பட்சி எப்படி பாலையும் நீரையும் பிரித்து பாலைமட்டும் பருகிறதோ அதுபோல நாம் நம் புலன்கள் வழியாகப் பெறும் அனைத்து அனுபவங்களையும் பகுத்து, திரை வேறு, பிம்பங்கள் வேறு என்ற உண்மையை உணருவதே வேதாந்தம் சொல்லும் வழி. இது உலகைத் துறப்பதல்ல. உலகம் நம் திரையில் நாம் காணும் காட்சி. நமக்கும் காட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. காட்சி பிம்பங்களோடு ஒன்றிப்போகாமல், வெறுமனே கேளிக்கை தரும் காட்சியாகவே ரசிக்கப்படும்போது அவை நம்மை பாதிப்பதில்லை.

இதனால் என்ன பலன்? தற்போது நம்முடைய அறியாமையால், கற்பனையால், தோற்றங்களை நிஜம் என்று தவறாக நினத்துக்கொண்டு, புலன்கள் வழியாக இந்த

உடல் அனுபவிக்கும் அனைத்து சுக துக்கங்களையும் 'நம்முடையது' என்று ஏற்றுக்கொண்டு அவதியுறுகிறோம். கடோபநிஷத்து இந்த உடலை ஒரு ரதமாகவும், உண்மையான நாம் (ஆத்மன்) அதில் பயணிக்கும் ஒரு பயணி என்றும் வருணிக்கிறது. ஆத்மனை உணராதபோது பயணியும் ரதமும் ஒன்றே என்று எண்ணி, ரதம் சந்திக்கும் சுக, துக்க அனுபவங்கள் அனைத்தும் பயணியுடையது என்று ஏற்றுக்கொண்டு கலங்குகிறோம். ரதம் வேறு, அதில் பயணிக்கும் உண்மையான நாம் வேறு என்று உணரும்போது, ஒரு பெரிய பாரம் நம்மை விட்டு விலகுகிறது.

சுகங்களும் துக்கங்களும் இந்த உலகப் பாதையில் ரதம் சந்திக்கும் பிரச்சனைகள். அவைகளைப் பற்றிக் கவலை கொள்ளக்கூடாது என்று சொல்ல வரவில்லை. நாம் பயன்படுத்தும் வாகனங்கள் பழுது அடைந்துவிட்டால் அதை சரி செய்கிறோம். எதற்காக? அவை நமக்கு உதவி செய்யும் கருவிகள். பாராமரிப்பு, சீர் செய்யாவிட்டால் நமக்கு தேவையான சமயத்தில் உபயோகப்படாமல் போகலாம். அதற்காக இந்த கருவிகளே நாம்தான் என்று எப்போதாவது நாம் யோசிக்கிறோமா? ஆனால் நாம் பயன்படுத்தும் உடல், உள்ளம், எண்ணக் கலவையான இந்தக் கருவியை மாத்திரம்தான் குழப்பத்துடன் அணுகுகிறோம். சில நேரங்களில் என்னுடைய உடல் என்கிறோம், சில நேரங்களில் இந்த உடலே நாம்தான் என்கிறோம். இந்த அடிப்படைக் குழப்பம் தீரும்போது, கருவி எது, எஜமானன் யார் வித்யாசம் தெரியும். கருவியின் பிரச்சனைகளை எஜமானன் ஏன் ஏற்றுக்கொண்டு அவதியுறவேண்டும் என்றதெளிவு கிடைக்கும்.

இந்தத் தெளிவே அனைத்து துக்கங்களிருந்தும், சந்தோஷங்களிருந்தும் நம்மை விலகி நிற்கச் செய்யும். இந்த அறியாமையிருந்து விடுதலை அடையும்போது, பரப்ரம்ம ஸ்வரூபமான, சதா பிரம்மானந்த நிலையில் சஞ்சரிக்கும் தெய்வப் பிறவி நாம் என்பதை உணரமுடியும். பிறப்பு, இறப்பை அனுபவிப்பது உடல். ஆனால் ஆத்மனுக்கு அழிவே இல்லை. இந்த நிலையை வேதாந்தம் 'மோட்சம்', 'ஜீவன் முக்தி' என்கிறது. வாழும்போதே புலன் அனுபங்களிருந்து விடுதலை உணர்வது. ஜென்ம ஸாபல்யம். அடிப்படையில் மனித உருவில், அருவமாக சஞ்சரிக்கும் தெய்வீகப் பிறவிகள் நாம். ஆனால் நாமோ சாதாரண மனிதர்களாக நம்மை கற்பனை செய்துகொண்டு, தெய்வீகத்தை தேடி அலைகிறோம்.

இந்த தெய்வீக நிலையை சதா உணர்வதே ஆனந்தம். பேரானந்தம். முடிவு இல்லாதது (அனந்தம்). பரந்து விரிந்தது. எல்லையில்லாதது. இந்த பேரானந்தத்தை சதா உணர்ந்து அதிலேயே திளைக்கும் திவ்யநிலையே, சத் சித் ஆனந்த நிலை. இதுவே அனந்த நிலை. 'கோடி' நிலை. 'தத் த்வம் அஸி' என்ற வேத உண்மையை பிரகடணப்படுத்தும் நிலை. அற்ப சந்தோஷங்களை தேடி அல்லல்படுவதை விடுத்து உண்மையான எல்லையில்லாத ஆனந்தத்தை உணர்ந்து இறப்பை வெல்வதே நம் பிறப்பின் காரணமாக இருக்கவேண்டும்.

இந்த 'கோடி' தத்துவங்களை ஓரளவுக்குப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் இவை நம் அன்றாட வாழ்க்கை நடைமுறையில் எப்படி சாத்தியம் என்று பலர் கேட்கலாம். வேதாந்தம் பல வழிமுறைகளை சொல்கிறது. முதல் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, முனைப்புடன் அவைகளை உணர்வதற்கான கடுமையான பயிற்சியில் இறங்கவேண்டும். வெற்றி கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். முன் காலத்தில் இத்தகைய பயிற்சிகளை அளிக்க குருகுலங்கள் இருந்தன. காலப்போக்கில் அவை மறந்துவிட்டன. தற்போது சொல்லித்தர தகுந்த குருமார்களோ குருகுலங்களோ இல்லை. கற்றுக்கொள்ளவும் நமக்கு ஆர்வமோ நேரமோ இல்லை.

இந்தக் குறையை நீக்கவே, மிக எளிமையாக வகையில் மக்களுக்கு வேதாந்த தத்துவங்களை நேரடியாக உணர்த்தும் வகையில் உருவாகியுள்ள புண்ணியத் தலமே வேலூர் மாவட்டம் (தற்போது திருப்பத்தூர் மாவட்டம்) ஆம்பூர் அருகில் உள்ள சென்னப்பமலை. 1600 ஆண்டுகளாக தக்ஷிண கைலாயமாக போற்றப்பட்டு வரும் இந்த திவ்யப்ரதேசத்தில் உலகின் 13வது ஜோதிர்லிங்கம் உத்பவித்துள்ளது. இங்கே ஐக்கியம் கொண்டு இருக்கிறார் அருவநிலையில் சஞ்சரிக்கும் பிரம்மகுரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கோடிதாத்தாஸ்வாமிகள். ஆதி அந்தம் இல்லாதவர், காலத்தைக் கடந்தவர். காணற்கரிய குரு. அருவநிலையில் இருக்கும் இந்த குரு, கூடுவிட்டு கூடு பாயும் சித்தாந்தக் கலை வழியாக தன் சீடன் உடலில் உருவம் கொண்டு, சீடனே குருவாகிறார். தன்னையே உதாரணமாக்கி (அவர் உண்மை ஸ்வரூபம் வேறு, அவர் பயன்படுத்தும் உடல் வெறு) என்றஉண்மையை புரியவைத்து தன்னை நாடி வரும் அன்பர்கள் கோடி நலம் பெறஆசீர்வதிக்கிறார். இந்தக் கோடி ஆசீர்வாதமே நாம் தேடி அடையத் துடிக்கும் பரமானந்த பிராப்தி, அனைத்து துக்க நிவர்த்தி. இதுவே ஜென்ம ஸாபல்யம். நாம் கேள்விப்படாத, அனுபவித்திராத அதிசயம். இந்த ரகசியத்தை உணர்ந்த அன்பர்கள் தங்கள் இன்னல்கள் தீர்ந்த விதம் தெரியாது திகைத்து நிற்பதும், அமைதியும், ஆனந்தமும் பொங்க தங்கள் புதிய ஆன்மிக அனுபவங்களை விவரித்து வியப்பதும் இந்தப் புண்ணியத் தலத்தில், அன்றாடம் நாம் காணும் சாதாரண நிகழ்வு.

# ஞானாக்னியும் காமாக்னியும்

நெருப்பைக்கொண்டுதான் இன்னொரு நெருப்பை அழிக்கமுடியும்! என்னங்க இது? நெருப்பை நீரால் அல்லவா அழிக்கமுடியும் என்று இவ்வளவு நாள் நினைத்துக் கொண்டிருந்தோம்? எப்படி நெருப்பு நெருப்பை அழிக்கும்? ஆம் நண்பர்களே. ஒரு நெருப்பைக் கொண்டுதான் இன்னொரு நெருப்பை அழிக்கமுடியும்! வேதாந்தம் இதைத்தான் மிடுக்கோடு எடுத்துச் சொல்கிறது. பண்டைய காலத்தில், மனித வாழ்க்கையில் நெருப்புக்கு (அக்னி) மிகுந்த முக்யத்துவம் அளிக்கபட்டிருந்தது. அக்னியை குறிக்க பல சொற்றொடர்கள் இருந்து வந்துள்ளதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ளமுடியும். நெருப்பை அதன் பல்வேறு தன்மைகளுக்கு ஏற்ப அக்னி, தகன, ஜ்வாலன, சப்தார்சி, பாவக, ஜாதேவேதஸ், ஹுடாசன, வாஹினி போன்றசொற்கள் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்துள்ளதை புராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ரிக் வேதத்தில், அக்னியை **'ஓம் அக்னிம்லே புரோஹிதம்'** என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. 'யக்ஞத்தை நடத்தும் புருஷர்களுக்கு ஹிதமாக இருக்கும் அக்னியே. நாங்கள் உனக்கு அளிக்கும் யக்ஞ வஸ்துக்களை இவர்கள் சார்பாக பரமனிடம் கொண்டு சேர்', என்பது இதன் பொருள்.

பகவத்கீதையில் அக்னிக்கு என்று தனி மரியாதை தரப்படுகிறது. அக்ஞானத்தை அழிக்கும் ஞானாக்னி (ஞான அக்னி) என்று அக்னி வருணிக்கப்படுகிறது. இச்சைகளால் உருவாகும் அக்னி காமாக்னி (காம அக்னி). இது நம் ஐம்புலன்களால் உருவாவது. ஆசைகள், மோகம், ஏக்கம், சிற்றின்பதாகம் போன்றவைகளை உள்ளடக்கியது. அந்த 'காமாக்னி'யை அழிக்கவல்ல ஒரே மாற்று அக்னி ஞானாக்னி என்று கீதை உபதேசிக்கிறது.

ஐம்புலன்களின் வேட்கைகளுக்கு பயாகும் நபர்களுக்கு காமாக்னி கொழுந்துவிட்டு எரிக்கிறது. இதை சாதாரணமாக அணைக்கவோ, தணிக்கவோ, அழிக்கவோ முடியாது என்பதை ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனனுக்கு விளக்குகிறார்:

**'ஆவ்ருதம் ஞானமேதென, ஞானினோ நித்யவாரீன**
**காம ரூபெய கௌண்டேய, துஷ்பூரே அனலேனச'**

'காமம் என்கிறஅணைக்கமுடியாத, தணிக்கமுடியாத இச்சைகளான அக்னியால் உன்னுடைய உண்மையான ஞானம் மூடி மறைக்கபட்டுள்ளது. உனக்குள் எரிந்துகொண்டிருக்கும் இந்த காம அக்னிதான் உன் முதல் எதிரி' என்பது இந்தப் பாடலின் பொருள்.

காம ரூபமாக கொழுந்துவிட்டு எரியும் அக்னியை 'அனலம்' என்கிறது இந்த பாடல். அலம் என்றால் 'போதும்'. அனலம் என்றால் போதாது. எப்போதும் தொடர்ந்து எரிந்துகொண்டே இருப்பதற்கு தனக்கு வேண்டிய எரிபொருள் தேடி அலையும் விசித்ர அக்னி இது. தணிக்கமுடியாத தாகம் கொண்ட கொடூர அக்னி என்பதைதான் ஸ்ரீ கிருஷ்ணர் இப்படி எச்சரிக்கிறார். 'அனலம்' என்கிறஇந்த வார்த்தை 'தணியாத, தணிக்க வழிவிடாத நெருப்பை' வர்ணிக்கும் ஒரு அழகான சொல். கொழுந்து அணைந்தாலும், தன்னுள் எப்போதும் தழலை தக்கவைத்துக் கொண்டிருக்கும் நெருப்பு இது. எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருந்துகொண்டு மீண்டும் எரியக் கூடிய வகையில் எரிபொருளான இச்சைகளை தூண்டி, தன் தாகத்தை தீர்த்துக் கொள்ளும் காம அக்னி இது.

நம்முடைய இச்சைகளைப் பற்றி இதை விடக் கடுமையாக எடுத்துச் சொல்லமுடியாது. எவ்வளவு முறைஇச்சைகளைப் பூர்த்தி செய்துக் கொண்டாலும் மேலும் மேலும் தொடர்ந்து நம்மை இச்சைபடத் தூண்டும் தன்மை கொண்டது காம அக்னி. திருப்தி தராதது. பழைய இச்சைகள் தீரும் முன்னரே புதிய இச்சைகளை வரிசையில் நிற்க வைத்துக் கொள்ளும் தன்மை படைத்தது. அறுசுவை உணவை உண்டு பசி என்கிறஇச்சையையை தற்காகமாக தீர்த்துக் கொண்டாலும், இன்னும் சிறிது நேரத்தில் மீண்டும் பசி தலை தூக்கி நம்மை உணவை தேடச் சொல்கிறது அல்லவா? இதைப் போலத்தான் அனைத்து வகையான இச்சைகளும். ஒரு முறை ஓரளவு தீர்ந்தாலும் மீண்டும் மீண்டும் பல வகையான இச்சைகளை நாடும் எண்ணங்களை தூண்டச் செய்கிறது. காம அக்னியை தற்காலிகமாகவே நாம் திருப்தி படுத்த முடிகிறது. அதன் தழல் அடுத்த இச்சைகளைக் கொண்டு தூண்டப்பட்டு மீண்டும் கொழுந்து விட்டு எரியக் காத்திருக்கிறது. இந்த காம அக்னிக்கு எரிபொருள் தந்து அந்த குறிப்பிட்ட இச்சையை தற்காலிகமாகப் அவ்வப்போது பூர்த்தி செய்துக் கொண்டாலும் இதிலிருந்து விடுதலை பெறுவதே பெரும் பாடு.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், சில அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் இச்சைகள் வேறு, சந்தோஷத்துக்காக ஏற்படுத்திக் கொள்ளும் இச்சைகள் வேறு. முக்கியமில்லாத இச்சைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும் பெரிய பிரச்சனை ஒன்றும் ஏற்படுவதில்லை. ஆனால் முக்கியம் என்று கருதி அது பூர்த்தி செய்யாமல் போகும்போது காம அக்னியில் மறைந்திருக்கும் தழல் உயிர் கொண்டு அந்த இச்சையை மேலும் தூண்டுகிறது. அந்த நேரத்தில் அந்த இச்சைக்கு நாம் அடிமை ஆகிவிடுகிறோம்.

இந்த அடிமைத்தனத்திருந்து எப்படி மீள்வது? எப்படி இந்த காம அக்னியை அழிப்பது? சரி, முழுமையாக அழித்துவிடலாம் என்று அதிகமாக எரிபொருள் அளித்தாலும் தீக்கொழுந்து அதிகமாகி, சிறிது நேரத்தில் அடங்கினாலும், அடித்தளத்தில்

சதா விழித்துக்கொண்டிருக்கும் தழல் அடங்குவதில்லையே. இச்சைகளில் அதிக நாட்டம் இருக்கும் நபர்களுக்கு இந்த நிலை பெரும் பாடாக அமைவதை நாம் கண்கூடாகக் காணமுடிகிறது. இத்தகைய நபர்களுக்கு முக்கியம் என்பதற்கும், சந்தோஷத்துக்கும் என்பதற்கும் வித்தியாசம் இல்லாமல் போகிறது. முக்கியமாக இல்லாவிட்டாலும் தொடர்ந்து அனுபவிக்கும் இச்சைகள் சிறிது காலத்தில் 'முக்கியமாகி' விடுகிறது. சதா இச்சைகளை நாடுகின்றனர் இவர்கள். இதைத்தான் 'போதை' என்கிறோம். திருப்தி செய்ய முடிவதில்லை. அதை தவிர்க்கவும் முடிவதில்லை.

ஆக, காம அக்னியை அழிக்கவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? முதலில் காம இச்சைகளுக்கு அடிப்படைக் காரணிகளை இனம் கண்டுகொள்ளவேண்டும். அனைத்து இச்சைகளுக்கு ஆதி காரணம் 'நம்முடைய அடிப்படை இயல்பை தெரிந்துகொள்ளாத அறியாமை' என்று ஆணித்தரமாக கூறுகிறது வேதாந்தம்.

நமக்குள் மறைந்துள்ள தெய்வீகத்தை அடையாளம் கண்டு உணர்வதுதான் நம் வாழ்க்கைத் தத்துவம் என்பது அனைத்து வேதங்களின் சாரம்ஸம். முழு நிறைவும், அமைதியும், ஆனந்தமும் கலந்த ஒரு அதிசயக் கலவைவையை நாம் தேடி அலைகிறோம். இந்த நிலையை உணரும் வரை நமக்குள் நிறைவு இல்லை என்றஎண்ணம் மேலோங்கி நிற்கிறது. இந்த நிறைவில்லா நிலையை பூர்த்தி செய்துகொள்ளவே நாம் மேலும் வேண்டும் என்று தேடுகிறோம். அமைதி இல்லை என்று நினைக்கும்போது, 'இச்சைகளை பூர்த்தி செய்துக் கொண்டால் மட்டுமே நமக்கு அமைதி, ஆனந்தம்' என்ற நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம்.

நம்முடைய இந்தத் தவறான அணுகுமுறைக்குக் காரணம் என்ன? நிறைவும், அமைதியும் ஆனந்தமும் வெளி உலகில் இருப்பதாக நினைக்கிறோம். அதனால் அவைகளை வெளியே தேடுகிறோம். உண்மையில் இவை அனைத்தும் கலந்த கலவையே நம் உண்மை சொரூபம் என்று உணர்ந்தால் மட்டுமே காமக்னீயை அழிக்கமுடியும். ஆன்மீகத்தை, தெய்வீகத்தை தேடி அலையும் சாதாரண மனிதப் பிறவிகள் என்று நம்மை நாம் நினைத்துக் கொண்டு தெய்வீகத்தை வெளியில் தேடுகிறோம். உண்மையில் தெய்வீக பிறவிகளான நாம் மனித உருவில் இருந்து நம் உண்மை சொரூபத்தை உணராமல் இருக்கிறோம்!

இச்சை என்கிறமாயை நம் உண்மை சொரூபத்தை மறைத்துள்ளது என்கிறது வேதாந்தம். நம் உண்மையான சொரூபத்தை புரிந்துகொள்ளும்போது, இந்த மெய்ஞானம், ஞான அக்னியாக உத்பவித்து காம அக்னியை அழிக்கிறது. இந்த ஞான அக்னி காம அக்னியில் எரிந்துகொண்டிருக்கும் எரிபொருளை முழுமையாக எரித்து சாம்பலாக்கி விடுகிறது. காமத் தழலுக்கு இடமே இல்லாமல் போகிறது.

காம அக்னி அழியும்போது, மாயை விலகுகிறது. நமக்குள்ளே மறைந்து இருக்கும் முழுநிறைவு, பூர்ணஅமைதி, எல்லையில்லா ஆனந்தம் (சத் சித் ஆனந்தம்) ஆகிய மூன்றும் கலந்த கலவையே நாம் என்கிறஉண்மையை உணரமுடிகிறது. வேதாந்த ஞானம் பெறும்போது இந்த உண்மை நமக்குள் வெளிப்படும்.

**'அந்தர்ஜோதிஹி பஹிர்ஜோதிஹி, பிரத்யக்ஜோதிஹி பராபரஹ**
**ஜோதிர்ஜோதிஹி, ஸ்வயம்ஜோதிஹி, ஆத்மஜோதிஹி ஷிவோஸ்யஹம்'**

'ஸ்வயம்ஜோதியாக தோன்றிய, ஜோதிகளுக்கெல்லாம் ஜோதியாக விளங்கும் ஆத்மஜோதி, நம் உள்ளே மறைந்திருக்கும் ஜோதியை உத்பவிக்கச் செய்து, ஜோதியை உலகெலாம் பரவசெய்து பராபரத்துடன் ஒன்றசெய்யும் சிவம் நான்' என்று ஞான அக்னியைப்பற்றி, ஸ்ரீ சங்கரர் தான் எழுதிய 'பிரம்ம ஞானாவளி' என்கிற நூலில் வருணித்துள்ளார்.

நண்பர்களே, இந்த ஞானத் தழலை பரம்பொருளிடம் பெற்ற ரிஷிகளும், ஞானிகளும், மஹாசித்தர்களும், இந்த மானுடம் உய்ய, தங்கள் தீட்சை வழியாக ஞான அக்னியை தங்களிடம் ஆசீர்வாதம் பெரும் ஒவ்வொரிடமும் உருவாக்கி வருகின்றனர், என்கிறது வேதாந்தம். சென்னப்பமலையில் ஐக்கியம் கொண்டுள்ள அருவகுரு ஸ்ரீ கோடிதாத்தாஸ்வாமிகள் பிரம்மத்தை உணர்ந்து இந்த ஞானத் தழலை பெற்றவர். இந்தத் தழல் கொண்டு, இந்த உலகம் தோன்றிய நாள் முதல், நாடி வரும் அன்பர்களுக்கு ஞான அக்னியை உத்பவிக்கச் செய்து வருகிறார். இந்த ஞான அக்னிதான் 'பிரம்ம ஞானஜோதி'. ஜோதிகளுக்கெல்லாம் ஜோதியான மஹாகுருவரால் மட்டுமே இந்த ஜோதியைக் கொண்டு இன்னொரு ஜோதியை உத்பவிக்கமுடியும். இந்த உண்மைத் தத்துவத்தை விளக்கவே, இந்த பிரம்மகுரு இந்த உலகின் 13வது ஜோதிர்லிங்கத்தை சென்னப்பமலையில் உத்பவிக்கச் செய்துள்ளார். காமக்னீயை அழித்து ஞானாக்னியை உணரத் துடிக்கும் அனைவருக்கும் இந்த குரு கிடைக்கரிய பொக்கிஷம்.

**நமோ நமோ**
**அரூபாய நமஹ**
**அனந்தாய நமஹ**
**ஆனந்தாய நமஹ**
**அச்சுதாய நமஹ**
**பரப்ரம்மாய நமஹ**
**சர்வரூபாய நமஹ**
**சத்யாய நமஹ**
**சத்ய க்யான அனந்த குருவே நமஹ**
**பிரம்ம குருவே நமஹ**
**ஆத்ம குருவே நமஹ**
**கோடி குருவே நமஹ**

# கோடி நலம் குவிக்கிறாயே கோடி குருவே !

விதி மாறி அமையும்,
வழி ஒன்று கிடைக்கும்
வந்து பாருங்கள் சென்னப்பமலைக்கு
வாழ்க்கை செழிப்பாய் இருப்பதற்கு!
பற்றி எரிகின்ற நம் வாழ்வில் -
நெய் விட்டு சிரிக்கின்ற உலகமிது.
சுற்றம் எனும் உறவெல்லாம்
சொல்வற்றி அழைத்தாலும் உதவாது!
மாங்கனியும் சுவைக்காது
மனம் அதை ஏற்காவிட்டால்
சுவைக்கும் நாக்கினுள் அதன்
சுவைபற்று வைத்தவன் சொக்கன்!
உன்னுள் ஜோதியாக உணர்த்துகிறான்
உண்மையை உணர்ந்துகொள் நண்பா
ஒளிரும் வழியாவார் என் கோடிகுரு!
நம் விதி மாற்றும் ஜோதிர்லிங்கமாவார்
அருவமமே உருவமாகும் அதிசய குருவே
அகில உலகின் பொன்முடி ஈசன் ஆவார்
நினத்தாலே நம்மை காக்கும் தயாளன்
கோடி நலன்கோடி அருள் தருவார்
நம்பிக்கையுடன் நாளும் துதிப்போம்
நம் இறைவன் கோடி குருவை
யார் இவர் என்று புத்தி கேட்டது அதையே
யார் இவர் என்று நானும் கேட்டேன்
கோடி அருள் தரும் குருவை
தேடி உணர வழிகாட்டி நண்பர் உமாஷங்கர்
மண்ணில் கிளர்ந்தெழும் விதைபோல
என்னில் உதித்து அழைத்தாயோ குருவே
துவளும் மனதோடு கண்ணீரில் கரைந்தேன்
துணை நின்றுகாட்சி தந்தாயே குருவே
அடைக்கலம் ஏதுமில்லா எனக்கு
ஆண்டவனே நீயே ஒரே துணை
ஆணவம் ஒடுக்கி நின்றால்
உன் அருளே என்றும் துணை
ஆசியோடு அன்பு காட்டினாய்
ஆனந்தம் இதுதான் என்று உணர்த்தினாய்
என் சந்தேகம் அகன்றது சலனம் தெரிந்தது
சரியென்று உணர்ந்தேன் சரணடைந்தேன்!
மனம் செயல்பட உம் திருநாமம் மந்த்ரம்
மதி செயல்பட உம் திருவார்த்தை எந்த்ரம்
காலனையே வெல்லும் உம் பார்வை
செல்வத்தை அள்ளும் உம்பாதம் தொட்டகைகள்
காஸ்மிக் தத்வம் கல்கண்டு வைத்யம்
உம்சுவாசமே மோட்சம்,
தீட்சை வினையருக்கும்
முன்மொழிந்தால் வழி மொழிவாய்
உம் வழி வந்தால் மனம் திறப்பாய்
உம் சொல்விதை எம் வாழ்க்கைக்கு வழி
தான் என்று உரைப்போற்கு
தாம் யார் என்று உரைப்பதில்லை
புரிந்த பொழுது பூ வென்று மணக்கும்
உம் புன்னகையே மௌனத்தின் விளக்கம்
போகாத ஊருக்கு வாசல் இல்லை உம்மை
புரியாத மனசுக்கு முக்தி இல்லை!
அனைத்தும் உணர்ந்த ஆண்டவன் நீர்
அகண்ட ஆற்றலை அள்ளித்தரும் ஸூர்யன்
முக்தி தரும் குருவே பொன்முடி ஈஸா
முக்கடல் கோடியைக் காத்து நின்ற ஜோதியே
மனம் சொல்லும் திருநாமம் கோடிதாத்தா
என் நா சொல்லும் திருநாமம் கோடிதாத்தா
நான் எனும் மாயையைக் கடந்தால்
கோடி நலம் குவிக்கிறாயே கோடி தாத்தா

பிரேம்குமார், சென்னை

# உலகின் 13வது ஜோதிலிங்கம்

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர்

# திருவாலயம் கட்டுவோம்!



குருஅருள் பொருள் தரும்
தானம் தனம் தரும்



அன்றாடம் ஆதவனைத் தொழுதால் ஆயுள் பெருகும்



ஏழு ஜென்ம சாபங்கள் நீங்கவும், சகல தோஷங்கள், மனக்குறைகள், கஷ்டங்கள் விலகவும், ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர் ஜோதிலிங்க தேவஸ்தானத்தில் ஞாயிறுதோறும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரருக்கு வெண்தாமரை மலரை சமர்ப்பித்து, தொட்டு வணங்கி வழிப்பட்டால், சர்வேஸ்வரன் ஏற்றுக்கொண்டு, ஜென்ம சாப விமோசனமும், சகல தோஷமும் நிவர்த்தி செய்து, அஷ்ட ஐஸ்வரியம் அளிக்கிறார். வழிபடும்போது இந்த மந்திரத்தை மூன்று முறை மனதார பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**"ஓம் நமச்சிவாய நமஹ : ஓம் சிவாய நமஹ : ஓம் பொன்முடி சூர்யநந்தீஸ்வராய நமஹ"**


**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பொன்முடி கோடீஸ்வரர் ராமநாத மஹாமடம், சாரிடபுள் & ரிலிஜியஸ் டிரஸ்ட்**

சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில், திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு - 635 811.

தொடர்புக்கு : 98949 96111, 99942 15036, 90802 20610, 94878 53322 Google Map : RM4Q+X9 Mittalam, Tamil Nadu

www.kodithathaswami.in kodithathaswami@gmail.com